**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

Registered No. M. 1434.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று வெளிவரும்,

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்." (திருக்குறள்)

வய்து 1 } 1920ளு ஏப்ரல்மீ சித்திரைத்தீ பங்குனிமு {மாதம் 8



| கெ. | வியாச விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் ... ... | 225 |
| 2. | சென்னை மாகாணப் புதுச்சட்ட சபையும் நாடார்களும் | 226 |
| 3. | எனது கதை ... ... | 230 |
| 4. | இளைச்சங்கம் ... ... | 232 |
| 5. | மானிடவர்க்க முன்னேற்றம் ... | 233 |
| 6. | கடிதங்கள் ... ... | 239 |
| 7. | விநோத விடுகதை வினா ... ... | 247 |
| 8. | சில்லரைக் குறிப்புகள் ... ... | 248 |
| 9. | இலங்கை நாடார்களும் சங்கமும் ... | 250 |
| 10. | சங்கப்பூர்த்தி விசேஷங்கள்... ... | 252 |
| 11. | லண்டன் கடித மொழிபெயர்ப்பு ... | 253 |
| 12. | மதுரைச் செய்தி ... ... | 255 |



ஸ்ரீ கு. ஆ. முத்துநாடார் பத்திராதிபர், பத்திராசிரியர்.

நவரத்னம் பிரஸ், மதராஸ்.

1920.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## சந்தாதாரர் கவனிக்கவேண்டிய விதிகள்.

1. பதில் தெரிய விரும்புவோர் ஸ்டாம்ப் அனுப்பவேண்டும்.

2. சந்தாதாரர்கள் தமது நெம்பரைக் குறித்தனுப்புவதுடன் முழு வி சத்தையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்.

3. இராஜ விரோதம், புறமத தூஷணை முதலிய அனாவசியமான கடி களை அங்கீகரிக்க முடியாது.

4. கடித விஷயதான மெழுதுவோர் பொதுவான வியாசமாகவே எழு வேண்டும். அனாவசியமான வியாசங்களை பதிப்பிக்க முடியாது.

5. சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் முன்பணமேனும் வி.பி யிலேனு செலுத்தலாம்.

6. எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச்சேர்ந்தாலும் முந்திய பத்திரிகைகளை சேர்த்தனுப்பப்படும்.

7. படிக்கத தெரியாமலும், வித்தியாசமான பதப்பிரயோகமும், கடி மிரண்டு பக்கமும் எழுதிவரும் வியாசங்களை கவனிக்க முடியாது.

## சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு தபாற்கூலி யுள்பட வருட மொன்றுக்கு ரூபா 1 8 0.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய ஜலப்பிரதேசங்கட்கு தபாற்கூலி உள்பட வருடமொன்றுக்கு ரூபா 2 0 0.

ஆறுமாத சந்தா கிடையாது.

## விளம்பர விகிதம்.

மாதம் ஒன்றுக்கு 1-பக்கத்திற்கு ரூபா 3 0 0
" " ½-பக்கத்திற்கு " 2 0 0

நீடித்தகால விளம்பரங் கொடுப்போர்களுக்கு சந்தாற்பானு சாரமாய் ச யமான சார்சக்கு விடப்படும் ஸ்டாம்ப் அனுப்பி பதில் தெரியலாம்.

## போஷகர் விவரம்.

மொத்தமாக ரூபா 50 கொடுப்பவர்கள் போஷகர்.
மொத்தமாக ரூபா 25 கொடுப்பவர்கள் ஜீவியசந்தாதாரர்.

இப்படிக்கு,
சு. ஆ. முத்து நாடார்,
பத்திராதிபர்.
நாடார் குல மித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

வேலுமயிலுந் துணை.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப்பிரசங்க சபையினின்று வெளிவரும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. } 1920ஆம் ஏப்ரல்மீ சித்தார்த்தி௵ பங்குனிமீ { மாதம் 8.

## கடவுள் வணக்கம்.

மரிவுரி யுடுத்துமலை வனநெற்கொ ரித்துமுதிர்
வனசருகு வாயில் வந்தால்
வன்பசித விர்த்துமனல் வெயிலாதி மழையால்
வருந்தியும் மூல வனலைச்
சிரமளவெ ழுப்பியும் நீரினிடை மூழ்கியுந்
தேகநம தல்ல வென்று
சிற்சுகவ பேக்ஷையாய் நின்னன்பர் யோகஞ்
செலுத்தினா ரியாம் பாவியேம்
விரவுமறு சுவையினொடு வேண்டிவ புசித்தணையில்
வேண்டிவ வெலா முடித்து
மேடமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொரு வருத்த மின்றி
இரவுபக லேழையர்கள் சையோக மாயினே
மெப்படியி ழைப்ப துரையாய்
இகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# நாடார்குல மித்திரன்.

சித்தார்த்தி-ஞு பங்குனி-மீ

## சென்னைமாகாணப்

## புதுச் சட்டசபையும் நாடார்களும்.

சீருஞ் சிறப்பும் பிறப்புரிமையாய்க் கொண்ட, நம்மிந்திய தே மானது காருண்யப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின், ஆட்சிக் குட்பட் சுமார் 150-வருடகால மாகியும், பிரிட்டிஷ் ராச்சியத்திற்கு இ வொரு பெரிய சார்புநாடாக விருந்து வந்திருக்கிறதேயன்றி, கான தேன்னாபிரிக்கா, ஆஸ்டிரேலியா, நியூஸிலிண்டு முதலான குடியேற் நாடுகளைப்போல் சுதந்தரமுள்ள தேசமாக்கப் படாமலிருந்து, செல் நிலைமை மிகச்சீர்கேடாய் விட்டது.

அதுகண்ட நமது தேசாபிமானிகள் பலரும், பல வருஷங்களா ராஜீய சுதந்தரம் பெறமுயற்சி செய்ததின் பலனை, ராஜசக்கிரவர்த் யவர்கள் ஆகஸ்டு அறிக்கைப் பிரகாரம் மாண்டேகு சேம்ஸ் போ சீர்திருத்த யாதாஸ்த்தை பார்லிமெண்டின் கூட்டுக் கமிட்டியார் ப சோதனைசெய்து மாக்ஷிமைதங்கிய ராஜ சக்கிரவர்த்தி யவர்களா இந்தியாவின் பொருப்பாட்சிச் சடிப் படையான, புதிய சீர்திருத் தந்திருப்பது நேயர்கள் பலரும் அறிந்தவிஷயம்.

அத்திருத்தத்தின்படி சென்னைமாகாணப் புதிய சட்டசபையி 127-அங்கத்தினர்க ளாவார்கள். அதில் மகம்மதியர் கிருஸ்தவர் ஆங் லோ இந்தியர் பஞ்சமர் முதலான ஜாதியார்களுக்கென ஒதுக்கிவை கப்பட்ட ஸ்தானங்கள் போக, பாக்கி 63-ஸ்தானங்கள் ஜனப்பிர நிதிகளாவார்கள். இவ் வறுபத்திமூன்று ஸ்தானங்களில் பிராமணர லாதவர்கட்குப் பிரத்தியேகமாய் இவ்வளவென வொருதிட்டம் ஏற் படுத்திக்கொள்ள வேண்டுமென்று பிராமண ரல்லாதவர்கள் சொன் தற்கிணங்கி இருவகுப்பார்களும் இருமுறை கான்பரென்ஸ் கூடியு ஒரு முடிவுக்கு வர முடியாமல் கவர்ன்மெண்டாரால் ஒரு மத்திய



தர் லார்மெஸ்டன் அவர்களை நியமித் திருந்தார்கள். 1-3-20-ல் அவர் கள் பிராமணர்களில் 6-பேர்களையும் பிராமணரல்லாதவர்களில் 6-பேர் களையும் அழைத்து இருதரப்பாரையும் ஒத்துப்போகும்படி சொல்லி யும் அங்கனம் ஒரு முடிவுக்கு வராமல் லார்டுமெஸ்டன் அவர்களின் தீர்ப்புக்கே விட்டு விட்டார்கள்.

இருதரப் பார்களுடைய வாக்குமூலங்களை யெல்லாங் கேட்டு பிராமண ரல்லாதாருக் கென்று பிராமணர்கள் மனமொப்பி விடுவ தாய்ச்சொன்ன திட்டத்திற்குங் குறைவாயுள்ள 28-ஸ்தானங்களே தீர்ப்புச்சொல்லி விட்டார்.

அவருடைய (லார்டு மெஸ்டன்) தீர்ப்பானது பிராமணரல்லா தாருக்கு மிக்க ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடியதேயாயினும், பிரா மணரல்லாதாருக்குள் ஒரு புதிய சக்திபிறந்து தென்னிந்திய நலவுரி மைக் கூட்டுரவு சங்கத்தையும், சென்னைமாகாணச் சங்கத்தையும் ஒன்று படுத்திவிட்டது. ஆகவே, எல்லாம் நன்மைக்காக வேற்படு கின்றன.

இவ் விருபத்தெட்டு ஸ்தானங்களும் சென்னைமாகாணம் 24-ஜில் லாக்களுக்குமேயாம். அதில் நாடார்கள் அதிகமாய் வசிக்கும் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, இம்மூன்று ஜில்லாக்களுக்கும் மொத்தம் 7. ஷை ஸ்தானங்களில் பிராமண ரல்லாதாருக்கென்று மூன்றுஸ்தானங்களுண்டு, மீதி 4, நாலு ஸ்தானங்களுக்கும் பிராமண ரல்லாதார் போட்டியும் போடலாம்.

தற்சமயம் நடந்துவரும் சட்டசபையில் மூன்று ஜில்லாக்களுக் கும் சேர்ந்து ஒருவர்தான் பிரதிநிதியா யிருக்கிறார். புதுத்திருத்தப் படி ஆறபேர்க ளதிகமாகிற படியால் அதிகச் சனத்தொகையுள்ள வகுப்பா ரனைவருக்கும் ஸ்தானங்கள் கிடைக்கக்கூடிய மார்க்கங்களி ருக்கின்றன ஓட்டுக் கொடுப்பவர்களின் சங்கியையும் அதற்குத் தக்க வாறு அதிகப் படுத்தப்பட்டு மிருக்கின்றனர்.

அதாவது இன்கம்டாக்ஸ் செலுத்துகிறவர்களும், 60-ரூபாய் வீட்டுவாடகை கொடுப்பவர்களும், பத்துரூபாய் நிலவரி செலுத்தக் கூடிய நிலத்தில் வேளாண்மை செய்கிறவர்களும், முனிசிபாலிடியில் 3-ரூபாய் தொழில்வரி செலுத்துகிறவர்களும், ஆகியயிவர்களெல்லாம் சட்டசபையில் ஸ்தானங்கள்பெற அபேக்ஷகராய் நிற்பவர்களுக்கு ஓட்டுக் கொடுக்கலாம். அதனால் சட்டசபை அபேக்ஷகர்கள் சாதா ரண ஜனங்களோடு நெருங்கிப் பழகவும் சாதாரண ஜனங்கள் இரா

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ஜாங்கவிஷய ஞானங்களைத் தெரிந்து கொள்ளவுமான நன்மைகளேற்படப் போகின்றன.

மேற்கண்ட ஏழு ஸ்தானங்களுக்கும் இப்போதே தேசியக் கட்சியாரும், மிதவாதிகளும், திராவிடக் கட்சியாரும், ஒருவர்பின் னொருவராய்க் கிளம்பி, கிராமங்கள்தோறும் சென்று தங்கள் தங்கள் கட்சிக்கு ஓட்டுக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றார்கள். தங்கள் தங்கள் கட்சியே ஞாயமானதென்றுங் கூறிவருகின்றார்கள். அவர்களெங்ஙனங் கூறினும் ஓட்டுக் கொடுப்பவர்கள் யார், யார், தேசத்திலுள்ள ஜனங்களின் நன்மைகளைக் கருதி, சட்டசபையில் பாடுபடுகின்றார்களோ, அவர்களுக்கே தங்களுடைய ஓட்டுகளைக் கொடுப்பார்களென்பதற் கையமில்லை.

நாடார் ஜனத்தொகை மொத்தம் 10-லக்ஷத்திற்கும், சட்டசபையிலிதுவரை ஒரு பிரதிநிதியாவது ஏற்படவில்லை. லாலி பிரபு அவர்கள், கவர்னரா யிருக்கும்போது முதலாவது பட்டிவீரன் பட்டியிலுள்ள நாடார்கள் ஒரு கூட்டங்கூடி மாட்சிமை தங்கிய கவர்னரவர்களுக்கு தந்தி மூலமாக நாடார்களுக்கும் ஒரு பிரதிநிதி நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள், அதைக்கேட்டு தேசாபிமானம் பூண்ட தினசரிப் பத்திரிகைகளெல்லாம் சட்டசபையில் வகுப்புக்கொரு பிரதிநிதிகளேற்பட்டால் சட்டசபைத் தானிடங் கொடுக்குமாவென்று அச்சமுற் றெழுதியது. கவர்ன்மெண்டாரவர்களும் நாடார்களை கவனிக்கவில்லை. தவிர, மாட்சிமை தங்கிய லார்டுபெண்ட்லண்டு அவர்கள் காலத்தில் பிறையார். ஸ்ரீமான், ரத்தினச்சாமி நாடார் அவர்களைக் குறித்து நாடார் சமூகம் அனேகதரம் விண்ணப்பங்க ளனுப்பினார்கள் அதையுங் கவனிக்கவில்லை. அதன்பிறகு மாட்சிமைதங்கிய லார்டு வில்லிங்டன் அவர்கள் கவர்னராய் வந்தத் தருவாயில் சட்டசபையில் ஸ்தானங்கள் புதுப்பிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போதும் நாடார்கள் விண்ணப்ப மனுப்பினார்கள். பிரயோசனப்படவில்லை. ஆனால் புதுத்திருத்தப்படி சபை அமைக்கப்படும்போது ஸ்தானங்கள் ஏற்படக் கூடுமென்று நம்பியிருந்தோம். ஆனாலிதுவரை ஏற்பட்டதாகவாவது, ஏற்படப் போகிறதாகவாவது தெரியவில்லை.

மகம்மதியருக்குத் தனி எலெக்ஷனும் கிருஸ்தவர்க்கும் பஞ்சமர்கட்கும் நாட்டுக்கோட்டை செட்டிமார்கட்கும் நாமனேஷன் மூலம் ஸ்தானங்கள் ஒதுக்கிவைத்த பிரகாரம் நாடார்களுக்கும் ஒரு ஸ்தானமாவது ஏன் ஒதுக்கிவைக்கக் கூடாதென்று கேட்கின்றோம்.



இதுபோக வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பேச்சு நடந்தகாலத்தில் பிராமணரும் பிராமண ரல்லாதாருங் கூடியகூட்டங்களில் நாடார்களுக்கும் ஸ்தானங்கள் ஏற்படவேணுமென்று பேசியிருக் கின்றார்கள். ஆகையால் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, இம்மூன்று ஜில்லாக்களுக்கும், மூன்று நாடார்களுக்கு ஸ்தானங்கள் கிடைக்கவேண்டும். அதற்காக நாடார்களில் யாராவது அபேட்சகராக முன்வரும்போது பிராமணர்களும் பிராமணரல்லாதவர்களும் வித்தியாசமில்லாமல் நாடார்களுக்குச் சாதகமாயெல்லாருடைய ஓட்டுகளையும் கொடுக்கும்படி காங்கிரஸ் அபிமானிகளும் மற்றத் தலைவர்களு முயற்சி செய்யவேண்டும்.

நாடார்கள் கவனிக்கவேண்டிய விஷயமாவது மேற்கண்ட புது அரசியல் சீர்திருத்தப்படி சட்டசபையின் பிரதிநிதிகளுக்கு ஓட்டுக் கொடுக்கும் சுதந்தரம் யென்னின்னாருக் குண்டென்ற விபரம் மேலே குறிப்பிட் டிருக்கின்றோம். ஓட்டுரிமை பெற்றவர்கள் யார் யார் என்று கவர்ன்மெண்டாரால் நியமிக்கப் பெற்ற கமிட்டியார்கள் தற்சமயம் பொருக்கி யெடுத்துக்கொண்டு வருகின்றார்கள். ஓட்டர்கள் இன்னின்னாரென்ற விபரம் ஜூன்மாதம் 15உக்குள் ஜில்லாக் கெஜட்டுகளில் அனுபந்தமாக வெளியிடப்படும். ஷை கெஜட்டு அனுபந்தம் முனுவிபாலிட்டிகளிலும், ரெவினியூடிவிஷனில்டிவிஷனாபீஸ்களிலும், விலைக்கி வாங்கலாம். கிராமங்களின் விசேஷவிடங்களிலும் விலைக்கி வாங்கலாம். ஷை காப்பிகளை நாடார்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பார்த்து, அதில்ஓட்டுக்குலாயக் கானவர்கள் பெயர் விடுபட்டிருக்குமானால் தங்கள் பெயர் குறிக்கப்படவில்லை யென்பதை ஜூலைமாதம் 15உக்குள் ரிஜிஸ்டிரேஷன் ஆபீஸிற்கு ஆள்மூலமாவது தபால் மூலமாவது அனுப்பலாம்.

ஆகஸ்டுமாதம் முதற் தேதிக்குள் வரும் ஆக்ஷேபனைகளையும் விசாரித் தறியவும் அதற்குறிய அதிகாரிகள் விசாரிக்குங்கால் சாட்சி மூலமாகவோ தனியாகவோ விசாரணை கர்த்தாக்கள் கோரியபடி ஆஜராக வேண்டும்.

ஒருவர் மற்றொருவருடைய நிலத்தை கிரயமாகப் பெற்று, பட்டா மாற்றுமலிருந்தாலும் நிலத்தைச் சாகுபடி செய்பவர்களே ஓட்டர்களாகப் போவதால், நிலத்தைக் கிரயம் பெற்றவர்கள் நிலத்தைக் கிரயம்செய்து கொடுத்த பட்டாதாருக்கு ஷை ஓட்டுரிமை போய்விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

இவ் விஷயங்களை வெகு நுட்பமாயறிந்து நாடார்களுக்கு மொத்தம் இத்தனை ஓட்டர்களுண்டென்று நிச்சயிப்பது மகா கஷ்டமான காரியமான படியினாலே ஓட்டார் ஜாபிதாவெளி யேறினவுடனே ஆங்காங்குள்ள சங்கத்தின் அங்கத்தினர்களில் முக்கியஸ்தர்கள் ஊர்க்கொருவராவது வெளியேறிக் கிராமங்கள்தோறும் சென்று, கிராமத்துச் சனங்களை விசாரித்து, ஓட்டர்ச் சாபிதா விடுதல்களைத் தெரிந்து அதிகாரிகளுக்குத் தெரிவித்து நாடார்களுக்குள்ள ஓட்டுப்பாத்தியம் விட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இதில் தீவிரமான வேலைகள் செய்யத் தவறினால் நாடார்களுடைய ஓட்டுகள் அனேகம் தவறுதலாய்ப் போய்விடும். ஜனக்கணித மெடுத்தவர்கள் அவர்கள் மனப்படி யெழுதிக்கொண்டு போனமாதிரி போனாலும் போகலாம். ஆசையால் அபிமானிகளெல்லாம் விழித்திருந்து வேலை செய்ய வேண்டும்.

இவ்வண்ணம் ஓட்டுரிமைபெற்ற நாடார்கள் அனைவரும் தங்களுடைய ஓட்டுகளை யாருடைய தயா தாட்சண்யத்திற்காவது எவருடைய அமுலுக்காவது பயந்து வேறேயாருக்காவது கொடுத்து விடப்படாது.

நாடார் மகாஜனசங்கம் கூடி நம்முடைய ஓட்டுகளை யாருக்குக் கொடுக்கும்படி சிபார்ஸ் செய்கின்றார்களோ அவருக்கே நம்முடைய ஓட்டுகளைக் கொடுக்கவேண்டுமென்பதை வற்புறுத்துகின்றோம்.

பத்திராதிபர்.

---

## எனது கதை

நான் விட்டாலும் கம்பளிமுட்டை என்னைவிடவில்லை:—என்னும் புராதனக் கதையை நமது மித்திராபிமானிகள் தெரிந்திருக்கலாம். அதுபோல் சும்மாயிருப்பதே சுகம். என்று நானிருந்தாலும் எனது வாயுங் கையும் என்னூராகிய சென்னைமாநகர்க் கதையை எழுதவும் பேசவும் மனதைத் தூண்டுகிறது. ஐந்நூறுவீட்டுக் கதிகமிருக்கலாம், வியாபார வித்வசிரோன்மணிகள் தான் தாராளமாக மகமை யேற்படுத்தி யேராளமான டணம் வசூல் செய்தார்கள். ஆண் பெண் ஸ்கூலும் ஆரம்பித்து நடத்துகிறார்கள். இடையில் யேற்பட்ட கையெழுத்து நிபந்தனையால் ஜனங்களுக்கும் தலைவர்களுக்கும் ஒற்றுமைக் குழப்பமுண்டது. இதுவே காரணம். மகமைவசூல் எங்கு சென்றதோ? மகமைக்குமஸ்தா எங்கிருக்கின்றாரோ? சங்கத்தின் பிரசிடெண்ட் வைஸ்பிரசிடெண்ட் செகிரிடெரிகள், கமிட்டி மெம்பர்கள் என்ன செய்கின்றார்களோ? அங்கும் ராமன் இங்கும் ராமன் எங்கும் ராமனாகத் தோன்றினான். என்றபடி சென்னையில்வாழும் என்குலமணிகளின் கதையானது தென் தேசமெங்கும் பரவலானது.



சமீபத்தில் நமது மித்திராதிபரும் சென்னைக்கு விஜயம் செய்தார். கக்ஷிப் பிரதிகக்ஷியாரிடமும் வோடினேன். எனது வோட்டத்தின் பலனாக எல்லோரும் யேகோபித்துக் கூட்டங் கூடினார்கள். விருந்தும் நடந்தது. விகற்பமும் ஒழிந்தது. விஷயமும் முடிவுக்கு வந்தது. விவரமாக முன் மித்திரனில் எழுதிவிட்டேன்.

பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போனதுகாணம்மானை, என்றபடி பேச்சோடு நின்றுவிட்டது. காலங் கடக்கிறது. காரியமான பாடில்லை. ஸ்கூல் நிர்வாகம் அவ்வளவு திருப்திகரமாயில்லை. எண்ணாயிரம்ரூபாய் வரை செலவுசெய்து கட்டிய புதுக்கட்டிடம் என்னைத் திறப்பாராரென்று எதிர்பார்க்கிறது. மகமை வசூல் இன்னும் ஆரம்பமாகவில்லை. ஊர் வரவு செலவு ஜாப்தா வெளியாயிருக்கிறது. அதை கவனிப்பாரார்?

சென்னை வாசிகளாகிய என்குல கனவான்களே, மகாதனவான்களே, நற்குணவான்களே. நாங்கள் பாண்டியர், க்ஷத்திரியர். அரசவம்சத்தவர், என்றபேசும் நமது வீரவார்த்தையைக் கவனியுங்கள். மார்பிற்புரளும் முப்புரிநூலைப் பாருங்கள். ராஜதானியாகிய சென்னையில் வாழும் நமது கண்ணியக்குறைவைத் தொடுவோமாகில், முன்சொன்ன வார்த்தை நமக்கெதற்கு? நாம் எடுத்த காரியத்தை கொடுத்து நடத்தாது விடுவோமாகில், க்ஷத்திரியத் திருநூலாகிய முப்புரிநூல் நமது மார்மே லெதற்கு? மகாமேதாவிகளாகிய உங்களுக்கு இதைவிட இன்னும்நான் சொல்வதென்ன?

நாடார்களே! இன்னுங் கொஞ்சகாலம் இந்த மவுனத்திலிருப்பீர்களாகில், தற்கால நாகரீகக் கடலைக் கடந்தவர்கட்கு நாம்சப்பலோட்டிந் திறமைக்கு வருவோமென்பது உண்மை. க்ஷாத்திரத்தை விடுங்கள். கோத்திராபி விருத்தியை நாடுங்கள். சீக்கிரம் சீக்கிரம். சென்னையில்வாழும் என்குலத் தலைவர்களே, நாட்டாண்மைக் காரர்களே, கொண்ட கோபத்தை நீக்கிக் கூட்டங்கூடி மகமை வசூலை நிலைநாட்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

டுங்கள். அப்படி யிப்படியாடி எப்படி சாய்வோமென்றிருக்கும் ஸ்… லைக் கவனித்து உங்கள் மனமாகிய தனத்தூண் நிருத்தி இனப்பிள்ளை… கள் முன்னேற்றமாகும் முயற்சியை நாடுங்கள். என்னருமை நாடா… குல மித்திரா! உற்றுக்கேட்ட எனதுகதையை விட்டுவிடாமல் மனதி… வைத்திரு. இத்துடனுகிலும் என்னூர்வாசிகள் ஒற்றுமையாகின்று… களா வென்பதைக் கவனித்து, அடுத்தமுறையு முன்னைச் சந்தித்… விடுத்தகதையைப் படித்து முடிக்கின்றேன்.

ச. சு. சங்கரலிங்க நாடார்.

---

## கிளைச்சங்கம்.

வதுவார்பட்டி:—இவ்வூரில் ஸ்தாபித்திருக்கும் நாடார் மகாஜன… கிளைச்சங்கம், 1-4-20-ல் கூடிய மாதாந்தர மீட்டிங்கில், முதலாளி மி… டர் ச. அ. ராமசாமி நாடார் அக்கிராசனம் வகித்ததாகவும், தூத்து… குடியில் சமீபத்தில் கூடப்போகும் நமது மகாஜனக் கான்பரென்சுக்… கனம் ராமநாதபுரம் ராஜா அவர்களை, அக்கிராசனராகத் தெரிந்தெடு… பதுசிதமெனத் தீர்மானித்ததாகவும், மற்றும்பல பிரமுகர்களால் அ… விஷய உபன்யாசம் நடந்ததாகவும் ஷை சங்கக்காரியம் மிஸ்டர் ந… செல்லக்கனி நாடார் தெரிவிக்கின்றார்.

பத்திராதிபர்.

---

## நமது மித்திராபி மானிகள்.

சென்னையிலுள்ள நமது சந்தாதாரர்கள் பலரும் பத்திரிகை… சரிவரக் கிடைப்பதில்லை யெனக்குறை கூறுகின்றனர். கிரமமாக… விலாசங்களெழுதிப் பிரதிமாதமும் தவராது போஸ்ட்செய்து வ… கின்றோம். இடையில் தபாற் புலிகள் வயிற்றுப்பசியி னிமித்தம் நம… பத்திரிகையைப் புசிக்கின்றன. என்பதும் தெளிவாய் விளங்குகிறத… இனியவ்விதம் நேரிடாதிருக்க மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட் செ… திருக்கின்றோம். ஆகவே சென்னைவாசிகள் தங்களுக்குச் சேராத ப… திரிகைகளை எழுதித் தருவித்துக் கொள்ளவும்.

பத்திராதிபர்.

---



## மானிடவர்க்கம் முன்னேற்றம் அடைந்து வருகின்றதா?

1. இறைவன் அருள்வெளியாய்ப் பரந்து நிற்கின்ற வுலகம் கற்பங்கள் தோறும் யுகங்கள் தோறும் அவனது ஆணையால் நவநவ விதங்களில் மாறிவரும் அரியதோர் இயல்பை நாம்கவனிக்கு மிடத்து அவன் அருட்டிறத்தை வியந்து புகழாதொழியோம். மாறுதல் என்பது உலகின் இயற்கையே, "ஜகம்" என்ற சொல்லே இக்கருத்தை நன்கு குறிப்பதாகும். "ஜகம்" எனும் பதம் செல்வது, நிலையாதது என்ற பொருளைக் கொடுக்கின்றது. இவ்வாறு அடிக்கடி மாறுபடுந் தன்மையையுடைய உலகு தற்போது அபிவிருத்தி யடைந்து வருகிறதா, முன்னேற்றம் பெற்று வருகின்றதா என்ற வினாவிற்கு விடையளிக்க முயல்வதே இவ் வியாசத்தின் கருத்தாகும்.

2. மாறுதல்கள் எனப்படுவைகளில் யாவுமே என்றுமொன்றும் பாண்டும் நன்மையைப் பயப்பனவாகா. அவைகளிற் பல ஜனசமூகத்திற்கு நன்மையையும் பயக்கலாகும் அல்லது தீமையையும் ஒருகால் பயக்கலாகும் அவை முன்னேற்றத்திற்கும் ஹேதுவாகலாம். பின்னேற்றத்திற்கும் ஹேதுவாகலாம்.

3. நமது ஹிந்துமக்களிற் பெரும்பாலரும் நமது தற்காலத்திய நிலைமை மிகவும் சீர்கேடாய் விட்டதென்றும் ஆனால் பண்டைநாளில் யாவும் சீராய் நடைபெற்று வந்தனவென்றும் கூறுகின்றனர். இது பல விஷயங்களில் உண்மையே. ஆயினும் உலகனைத்துமே முன்னேற்றம் அடையாது பின்னேற்றம் அடைந்து வருகின்றதென்பது ஒப்பத்தகாதன்று. ஹிந்து மக்கள் மாத்திரமேயன்றி ஏனைய சிலதேசத்தாரும் சென்ற 15-அல்லது 20-நூற்றாண்டுகளாய்த் தம் அபிவிருத்தி தடைப்பட்டு, அவர்கள் யாவருமே க்ஷீணகதியை யடைந்து விட்டனரென்பது உண்மையே. எகிப்து, பாரசீகம், சீனு மெக்னிகோ முதலிய நாடுகளின் முற்காலச் சரித்திரத்தை நாம் கவனிக்குமளவில், நவீன நாகரீகத்திலும் பன்மடங்கு மேலானதாய் அவற்றின்நாகரீகம் இருந்ததென்பதை நாம், நன்கறியலாகும்.

4 இந் நாகரீகங்களை யுலகிற்கு அக்காலத்தில் அணிந்து ஜனசமூகம் அபிவிருத்தி யடையுமாறு உதவிய புருஷர்கள் யாவர்? அவர்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## மானிடவர்க்கம் முன்னேற்றம் அடைந்து வருகின்றதா?

1. இறைவன் அருள்வெளியாய்ப் பரந்து நிற்கின்ற வுலகம் கல்பங்கள் தோறும் யுகங்கள் தோறும் அவனது ஆணையால் நவநவ விதங்களில் மாறிவரும் அரியதோர் இயல்பை நாம்கவனிக்கு மிடத்து அவன் அருட்டிரத்தை வியந்து புகழாதொழியோம். மாறுதல் என்பது உலகின் இயற்கையே, "ஜகம்" என்ற சொல்லே இக்கருத்தை நன்கு குறிப்பதாகும். "ஜகம்" எனும் பதம் செல்வது, நிலையாதது என்ற பொருளைக் கொடுக்கின்றது. இவ்வாறு அடிக்கடி மாறுபடுந் தன்மையையுடைய உலகு தற்போது அபிவிருத்தி யடைந்து வருகிறதா, முன்னேற்றம் பெற்று வருகின்றதா என்ற வினவிற்கு விடையளிக்க முயல்வதே இவ் வியாசத்தின் கருத்தாகும்.

2. மாறுதல்கள் எனப்படுவைகளில் யாவுமே எஞ்ஞான்றும் யாண்டும் நன்மையைப் பயப்பனவாகா. அவைகளிற் பல ஜனசமூகத்திற்கு நன்மையையும் பயக்கலாகும் அல்லது தீமையையும் ஒருகால் பயக்கலாகும் அவை முன்னேற்றத்திற்கும் ஹேதுவாகலாம். பின்னேற்றத்திற்கும் ஹேதுவாகலாம்.

3. நமது ஹிந்துமக்களிற் பெரும்பாலரும் நமது தற்காலத்திய நிலைமை மிகவும் சீர்கேடாய் விட்டதென்றும் ஆனால் பண்டைநாளில் யாவும் சீராய் நடைபெற்று வந்தனவென்றும் கூறுகின்றனர். இது பல விஷயங்களில் உண்மையே. ஆயினும் உலகனைத்துமே முன்னேற்றம் அடையாது பின்னேற்றம் அடைந்து வருகின்றதென்பது ஒப்பத்தகாதன்று. ஹிந்து மக்கள் மாத்திரமேயன்றி ஏனைய சிலதேசத்தாரும் சென்ற 15-அல்லது 20-நூற்றாண்டுகளாய்த் தம் அபிவிருத்தி தடைப்பட்டு, அவர்கள் யாவருமே க்ஷீணகதியை யடைந்து விட்டனரென்பது உண்மையே. எகிப்து, பாரசீகம், சீனா மெக்ஸிகோ முதலிய நாடுகளின் முற்காலச் சரித்திரத்தை நாம் கவனிக்குமளவில், நவீன நாகரீகத்திலும் பன்மடங்கு மேலானதாய் அவற்றின்நாகரீகம் இருந்ததென்பதை நாம் நன்கறியலாகும்.

4 இந் நாகரீகங்களை யுலகிற்கு அக்காலத்தில் அணிந்து ஜனசமூகம் அபிவிருத்தி யடையுமாறு உதவிய புருஷர்கள் யாவர்? அவர்





கள் மானிட சமூகம் ரக்ஷகர்களான சித்தி, முத்தியென்ற இரு பதவிகளையும் பெற்ற இறைவன் திருத்தொண்டனே யாவர். இவர்களுடைய சங்கம் "வெள்ளியம்பலம்" என்றும் "திருச்சிற்றம்பலம்" என்றும் "பழவடியார்களின் திருக்கூட்டம்" என்றும் "சிற்சபை" என்றும் பலபெயர்களை யுடையது. உலகுபகாரமே இவர்கள் விபகாரம். இம்முனிவர் குலத்திலுள்ள ஆசிரியர்களிற் சிலர் காலதேச வர்த்தமானத்திற்கேற்ப உலகிற்கேற்றன்றி, நூதன மதங்களை ஏற்படுத்தவோ அல்லது மறக்கப்பட்ட பழைய உண்மைகளை மறுமுறையும் வெளிப்படுத்தவோ, அரசியல் முறையைச் சீர்திருத்தி யபிவிருத்தி மார்க்கத்திற் செல்கின்ற ஜீவர்கட்கும் உதவவோ முயற்சி செய்கின்றனர். அக்காலங்களிலுள்ள ஜனங்கள் இவர்களது யதார்த்த உத்தம நிலைமையை அறிவதுளப்பொழுதும்சாத்தியமில்லையாயினும் அவர்கள்உலகைவிட்டு நீங்கிய பொழுதேனும் அவர்களது கௌரவத்தை யுணர்ந்து, ஜனதலைவர்களாகவும் ஆசிரியர்களாகவும் அவர்களை மதித்து அன்போடு அவர்களது ஞாபகார்த்தைப் போற்றுவர். சாமானிய ஜனங்கள் அப்பெரியார்கள் செய்துள்ள ஆன்மார்த்த உதவியைப் போற்றிய போதிலும், சில்காலஞ் சென்ற பின்னர் அதனைமறந்து தாங்கள் இழிவழிகளில் ஒழுகுவதும் சகஜமே. அத்தகைய தீமையையகற்ற மறுமுறையும் அப் பெரியோர் அக் காலங்களில் தோன்றுவர். இவ்வாறு, சாமானிய ஜனங்களுடைய பரிபக்குவம் ஒன்று, அம் முனிவர் குழாத்தினின்று தோன்றும் ஆசிரியர்கள் செய்யும் வேலை மற்றொன்று. இவ்விரண்டு உண்மைகளையும் நாம் நன்கு மனதிற் கொண்டால், பின் கூறுபவை யாவர்க்கும் நியாயமே யெனத் தோன்றக்கூடும்.

5. உலகம் முன்னேற்றம் அடைகின்றது என நாம் கூறும் பொது சாமானிய ஜனங்கள் அறிவு, அன்பு, ஆற்றல் முதலியவற்றில் அபிவிருத்தியடைந்து வருகின்றனரென அக்கூற்று பொருள்படும். ஜீவன் முக்தர்களான பெரியோர்களும் அவர்களது சீடர்களும் உலகிலவதரித்து அப்பொழுது அருளிச்செய்த செயல்களைச் சாமானிய ஜனங்கள் செய்தனரென்று நினைப்பது பெரும் பிழையாகும். பண்டை நாளிலோ ஜனசமூகம் முழுதுமே குழந்தை பருவத்திலிருந்தது ஆனால் தற்போதோ அது வாலிபப் பருவமடைந்து வருகின்றது. எவ்வாறு ஓர் குழந்தை, நாட்கள் செல்லச்செல்ல, திரேகபலத்தில் விருத்தியடைந்து அதன் ஆன்மாவிடம் மறைந்து கிடக்கும்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

கள் மானிட சமூகம் ரக்ஷகர்களான சித்தி, முத்திஎன்ற இரு பதவிகளையும் பெற்ற இறைவன் திருத்தொண்டனே யாவர். இவர்களுடைய சங்கம் "வெள்ளியம்பலம்" என்றும் "திருச்சிற்றம்பலம்" என்றும் "பழவடியார்களின் திருக்கூட்டம்" என்றும் "சிற்சபை" என்றும் பலபெயர்களை யுடையது. உலகுபகாரமே இவர்கள் விபகாரம். இம்முனிவர் குலத்திலுள்ள ஆசிரியர்களிற் சிலர் காலதேச வர்த்தமானத்திற்கேற்ப உலகிற்றேன்றி, நூதன மதங்களை ஏற்படுத்தவோ அல்லது மறக்கப்பட்ட பழைய உண்மைகளை மறுமுறையும் வெளிப்படுத்தவோ, அரசியல் முறையைச் சீர்திருத்தி யபிவிருத்தி மார்க்கத்திற் செல்கின்ற ஜீவர்கட்கும் உதவவோ முயற்சி செய்கின்றனர். அக்காலங்களிலுள்ள ஜனங்கள் இவர்களது யதார்த்த உத்தம நிலைமையை அறிவதுஎப்பொழுதும்சாத்தியமில்லையாயினும்அவர்கள்உலகைவிட்டு நீங்கிய பொழுதேனும் அவர்களது சௌரவத்தை யுணர்ந்து, ஜனதலைவர்களாகவும் ஆசிரியர்களாகவும் அவர்களை மதித்து அன்போடு அவர்களது ஞாபகார்த்தைப் போற்றுவர். சாமானிய ஜனங்கள் அப்பெரியார்கள் செய்துள்ள ஆன்மார்த்த உதவியைப் போற்றிய போதிலும், சிலகாலஞ் சென்றபின்னர் அதனைமறந்து தாங்கள் இழிவழிகளில் ஒழுகுவதும் சகஜமே. அத்தகைய தீமையையகற்ற மறுமுறையும் அப் பெரியோர் அக் காலங்களில் தோன்றுவர். இவ்வாறு, சாமானிய ஜனங்களுடைய பரிபக்குவம் ஒன்று. அம் முனிவர் குழாத்தினின்று தோன்றும் ஆசிரியர்கள் செய்யும் வேலை மற்றொன்று. இவ்விரண்டு உண்மைகளையும் நாம் நன்கு மனதிற் கொண்டால், பின்கூறுபவை யாவர்க்கும் நியாயமே யெனத் தோன்றக்கூடும்.

5. உலகம் முன்னேற்றம் அடைகின்றது என நாம் கூறும்பொழுது சாமானிய ஜனங்கள் அறிவு, அன்பு, ஆற்றல் முதலியவற்றில் அபிவிருத்தியடைந்து வருகின்றனரென அக்கூற்று பொருள்படும். ஜீவன் முக்தர்களான பெரியோர்களும் அவர்களது சீடர்களும் உலகிலவதரித்து அப்பொழுது அருளிச்செய்த செயல்களைச் சாமானிய ஜனங்கள் செய்தனரென்று நினைப்பது பெரும் பிழையாகும். பண்டைய நாளிலோ ஜனசமூகம் முழுதுமே குழந்தை பருவத்திலிருந்தது ஆனால் தற்போதோ அது வாலிபப் பருவமடைந்து வருகின்றது. எவ்வாறு ஓர் குழந்தை, நாட்கள் செல்லச்செல்ல, கிரமபலத்தில் விருத்தியடைந்து அதன் ஆன்மாவிடம் மறைந்து கிடக்கும்



குணங்களாகிய அன்பு, அறிவு முதலியவைகளிலும் விகாச மடைகின்றனவோ அதுவேபோல் மானிடவர்க்கமும் விகாசமடைந்து வருகின்றது. இது இறைவன் சங்கற்பம் இதனை நெடுங்காலம் நாம் எதிர்க்க நம்மாலியலாது. அபிவிருத்தி யென்பதே ஈசுவர நியதி. இதனைநாம் அறிந்து அவனால் வகுக்கப்பட்ட சட்டங்களுக்கு ஒவ்வி நடந்தால் உலகினர் க்ஷேமமும் நமது க்ஷேமமும் இனிது சீக்கிரம் நடைபெறும். இன்றேல் நாம் பெருந்துயரத்தை யனுபவித்து, நெடுங்காலமானபின்னர் இறைவன் அருள்வலியை யறிந்து ஒழுகுவோம். ஆதலால் அறிவுடையார் எவரும் அவனது சங்கற்பத்திற் கிணங்க நடப்பர்.

6. தற்போது உலகின் நிலைமையாது? நமது அபிவிருத்தி யெவ்வாறிருக்கின்றது? என்ற வினாவிற்கு யாதேனும் விடையுளதா?

நவீன நாகரீகத்தில் பல பெருங்குறைக ளுள்ளனவென்பதை நாம் மறக்கமுடியாது. ஆயினும் நமது பண்டைக்காலத்திய நிலைமையினும் பெருமையாய் பிற்காலத்தில் நாம் வாழ்வோ மென்பதில் சிறிதும் ஐயமில்லை. சென்ற சில நூற்றாண்டுகளாய் மேனாட்டில் "சையன்ஸ்" என்ற பிரத்தியக்ஷ விசாரம் பலப்பட்டு, அதன் பலனாய் உலகெங்குமே பலபெரிய அற்புத இயந்திரங்களும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்தில் வந்திருக்கின்றன. போக்குவரவுக்குரிய சாதனங்கள் அபிவிருத்தி யடையவே, ஆயிரக் கணக்கான மைல்கள் தூரத்திலுள்ள தேசங்களும் புகைவண்டியால் இணைக்கப்பட்டு, ஒரு தேசத்தைப்பற்றிய அறிவு மற்றதேசத்திற்கு புத்தகம் பத்திரிகை முதலியவற்றால் பரவிவந் திருக்கின்றது. இவ்விதம் பூமியின் பல்வேறு பாகங்களும் அநேக விதங்களில் தூலத்திலும் சூக்ஷுமத்திலும் ஒன்றுபட்டு வருவதை நாம் பார்க்கிறோம்.

7. அதனோடு நமது நாட்டில் பலவேறு ஜாதிகளும், பல வேறு மதத்தினர்களும், பல்வேறு ஆசாரங்களை யுடையவர்களும் ஆங்கில அரசாட்சியின்கீழ் சகோதர பாவத்துடன் வாழ்ந்து வருங்காட்சி மிகவும் அதிசயிக்கத் தக்கதேயாம். மதசமரசம் என்ற விஷயம் முக்கியமென்பது யாவராலும் கருதப்பட்டு வருகின்றது. இது நூதனமாய் இந்நூற்றாண்டில் ஏற்படுத்தப் பட்டதல்லது. இஃது ஏற்கனவே யுள்ள உண்மையாகும். இதனையறிந்தும் அனுஷ்டானத்திற் கொண்டு

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

குணங்களாகிய அன்பு, அறிவு முதலியவைகளிலும் விகாச மடைகின்றனவோ அதுவேபோல் மானிடவர்க்கமும் விகாசமடைந்து வருகின்றது. இது இறைவன் சங்கற்பம் இதனை நெடுங்காலம் நாம் எதிர்க்க ந ம் ம ா லி ய ல ா து. அபிவிருத்தி யென்பதே ஈசுவர நியதி. இதனைநாம் அறிந்து அவனால் வகுக்கப்பட்ட சட்டங்களுக்கு ஒவ்வி நடந்தால் உலகினர் க்ஷேமமும் நமது க்ஷேமமும் இனிது சீக்கிரம் நடைபெறும். இன்றேல் நாம் பெருந்துயரத்தை யனுபவித்து, நெடுங்காலமானபின்னர் இறைவன் அருள்வலியை யறிந்து ஒழுகுவோம். ஆதலால் அறிவுடையார் எவரும் அவனது சங்கற்பத்திற் கிணங்க நடப்பர்.

6. தற்போது உலகின் நிலைமையாது? நமது அபிவிருத்தி யெவ்வாறிருக்கின்றது? என்ற வினாவிற்கு யாதேனும் விடையுளதா?

நவீன நாகரீகத்தில் பல பெருங்குறைகளுளவென்பதை நாம் மறுக்கமுடியாது. ஆயினும் நமது பண்டைக்காலத்திய நிலைமையினும் பெருமையாய் பிற்காலத்தில் நாம் வாழ்வோமென்பதில் சிறிதும் ஐயமில்லை. சென்ற சில நூற்றாண்டுகளாய் மேனாட்டில் "சையன்ஸ்" என்ற பிரத்தியக்ஷ விசாரம் பலப்பட்டு, அதன் பலனாய் உலகெங்குமே பலபெரிய அற்புத இயந்திரங்களும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்தில் வந்திருக்கின்றன. போக்குவரவுக்குரிய சாதனங்கள் அபிவிருத்தி யடையவே, ஆயிரக் கணக்கான மைல்கள் தூரத்திலுள்ள தேசங்களும் புகைவண்டியால் இணைக்கப்பட்டு, ஒரு தேசத்தைப்பற்றிய அறிவு மற்றதேசத்திற்கு புத்தகம் பத்திரிகை முதலியவற்றால் பரவிவந் திருக்கின்றது. இவ்விதம் பூமியின் பல்வேறு பாகங்களும் அநேக விதங்களில் தூலத்திலும் சூக்ஷுமத்திலும் ஒன்றுபட்டு வருவதை நாம் பார்க்கிறோம்.

7. அதனோடு நமது நாட்டில் பலவேறு ஜாதிகளும், பல வேறு மதத்தினர்களும், பல்வேறு ஆசாரங்களை யுடையவர்களும் ஆங்கில அரசாட்சியின்கீழ் சகோதர பாவத்துடன் வாழ்ந்து வருங்காட்சி மிகவும் அதிசயிக்கத் தக்கதேயாம். மதசமரசம் என்ற விஷயம் முக்கியமென்பது யாவராலும் கருதப்பட்டு வருகின்றது. இது நூதனமாய் இந்நூற்றாண்டில் ஏற்படுத்தப் பட்டதல்லது. இஃது ஏற்கனவே யுள்ள உண்மையாகும். இதனையறிந்தும் அநுஷ்டானத்திற் கொண்டு



வருவதுதான் முன் காலத்தில் பெரும் பிரயாசையாயிருந்தது. ஜீவர்கள் யாவரும் ஒரே சோபான மார்க்கத்தில் வெவ்வேறு படிகளில் நிற்பவர்களென்றும், அவர்களது பக்குவத்திற்கேற்ப, சமய முறைகளால் இறைவனது திருத்தொண்டர்களான வெள்ளியம்பல ஆசிரியர்களால் வெவ்வேறு காலங்களில் அளிக்கப் பட்டனவென்றும், ஆதலால் அவற்றில் முரணாய்த் தோன்றக்கூடிய அம்சங்கள் யாவும்காலம், நாமம் ஜன நிலைமை என்ற இவற்றினால் உண்டானவை யென்றும் இப்பொழுது நமக்கு விளங்குகின்றது. இவ்வித அறிவு ஒற்றுமையைப் பலப்படுத்து கின்றதல்லவா?

8. மனுஷ்ய ஜாதியில் பலவர்க்கங்களுள்ளன உலகின் கண்ணுள்ள எல்லா ஜாதிகளும் தங்கள் வேற்றுமைகளைக் கவனியாது ஒருங்கே கூடித் தங்கள் சகோதரப் பான்மையைக் கொண்டாட வேண்டுமென்று 1918ல் லண்டன் நகரில் காங்கிரஸ் ஒன்று கூட்டப் பெற்றது(Universal Race Congress) இதனைப்போல்முற்காலங்களில் எங்கேனும் நடந்ததாய் நமக்குத் தெரிகின்றதா? இல்லையே. அன்றியும் உலகெங்கும் சுதந்திர வுணர்ச்சியும், கல்வியில் பேரவாயும், ஜனசமூக கைங்கரியத்தில் ஊக்கமும் தற்போது காணப்படுவதுபோல் பண்டை நாளில் எங்கேனும் இருந்ததாய் நாம் கேள்விப்பட் டிருக்கின்றோமா?

9. மேற்குறித்த குணங்கள் யாவும் சென்ற வாண்டுவரை நிகழ்ந்த ஐரோப்பிய யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நாட்டு வீரர்களிடத்தும் ஜனங்களுக்கும் சிறந்து விளங்கவில்லையா? பொது ஜனங்கள் ராஜீய விஷயங்களில் தற்போது புகுந்துழைப்பதுபோல் முன்னாளில் "ஒருபொழுதும் உழைத்ததாய் தெரியவில்லை. இதுவே ஜனங்கள் நாயகம் பெறுங்காலம் அரசர்கள் தம் பிரஜைகளின் க்ஷேமத்திற் கண்ணுங் கருத்துமா யிருந்தாலொழிய தமது அரசுரிமையைக் கொண்டாட வியலாது. வரிவசூல் செய்யவோ, போர் தொடங்கவோ சமாதானஞ் செய்யவோ வேண்டுமாயின், ஜனப் பிரதிநிதிகளின் சம்மதத்தின் பேரிலேயே இவையாவும் நடைபெற வேண்டி வருகின்றன. இம்முறை நியாயமே என்ற நம்பிக்கை உலகெங்கும் பரவிவருகின்றது. ஜீவர்கள்யாவரும் வெளியிலிருந்துவரும் நிர்ப்பந்தம் யாதுமின்றி சுதந்திர வழியாய்ப் பரிபக்குவம்பெற்று வரத்தகுந்த நிலைமை தற்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

வருவதுதான் முன் காலத்தில் பெரும் பிரயாசையாயிருந்தது. ஜீவர்கள் யாவரும் ஒரே சோபான மார்க்கத்தில் வெவ்வேறு படிகளில் நிற்பவர்க ளென்றும், அவர்களது பக்குவத்திற்கேற்ப, சமய முறைகளால் இறைவனது திருத்தொண்டர்களான வெள்ளியம்பல ஆசிரியர்களால் வெவ்வேறு காலங்களில் அளிக்கப் பட்டனவென்றும், ஆதலால் அவற்றில் முரணுய்த் தோன்றக்கூடிய அம்சங்கள் யாவும்காலம், நாமம் ஜன நிலைமை என்ற இவற்றினுல் உண்டானவை யென்றும் இப்பொழுது நமக்கு விளங்குகின்றது. இவ்வித அறிவு ஒற்றுமையைப் பலப்படுத்து கின்றதல்லவா?

8. மனுஷ்ய ஜாதியில் பலவர்க்கங்க ளுள்ளன உலகின் கண்ணுள்ள எல்லா ஜாதிகளும் தங்கள் வேற்றுமைகளைக் கவனியாது ஒருங்கே கூடித் தங்கள் சகோதரப் பான்மையைக் கொண்டாட வேண்டுமென்று 1918ஆ லண்டன் நகரில் காங்கிரஸ் ஒன்று கூட்டப் பெற்றது(Universal Race Congress) இதனைப்போல்முற்காலங்களில் எங்கேனும் நடந்ததாய் நமக்குத் தெரிகின்றதா? இல்லையே. அன்றியும் உலகெங்கும் சுதந்திர வுணர்ச்சியும், கல்வியில் பேரவாயும், ஜனசமூக சைங்கரியத்தில் ஊக்கமும் தற்போது காணப்படுவதுபோல் பண்டை நாளில் எங்கேனும் இருந்ததாய் நாம் கேள்விப்பட் டிருக்கின்றோமா?

9. மேற்குறித்த குணங்கள் யாவும் சென்ற வாண்டுவரை நிகழ்ந்த ஐரோப்பிய யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நாட்டு வீரர்களிடத்தும் ஜனங்களுக்கும் சிறந்து விளங்கவில்லையா? பொது ஜனங்கள் ராஜீய விஷயங்களில் தற்போது புகுந்துழைப்பதுபோல் முன்னுளில் ஒருபொழுதும் உழைத்ததாய் தெரியவில்லை. இதுவோ ஜனங்கள் நாயகம் பெறுங்காலம் அரசர்கள் தம் பிரஜைகளில் க்ஷேமத்திற் கண்ணுங் கருத்துமா யிருந்தாலொழிய தமது அரசுரிமையைக் கொண்டாட வியலாது. வரிவசூல் செய்யவோ, போர் தொடங்கவோ சமாதானஞ் செய்யவோ வேண்டுமாயின், ஜனப் பிரதிநிதிகளின் சம்மதத்தின் பேரிலேயே இவையாவும் நடைபெற வேண்டி வருகின்றன. இம்முறை நியாயமே என்ற நம்பிக்கை உலகெங்கும் பரவிவருகின்றது. ஜீவர்கள்யாவரும் வெளியிலிருந்துவரும் நிர்ப்பந்தம் யாதுமின்றி சுதந்திர வழியாய்ப் பரிபக்குவம்பெற்று வரத்தகுந்த நிலைமை தற்



போதுதான் கிட்டி யிருப்பதுபோல் தெரிகின்றது. ஸ்திரிஜனங்களுடைய சுதந்திர கிளர்ச்சியும் அதே நிதியை காண்பிக்கின்றது.

10. வெள்ளை, கருப்பு என்ற இருவர்ணங்களையுடைய மானிட வர்க்கத்திற்கும் வெகுகாலமாய் ஏற்பட்டுள்ள போராட்டம் அறவே நீங்குங்காலம் சமீபித்து விட்டதெனலாம். யுத்தத்தின் பலனுய், ஒரு தேசம் பீடிக்கப்படின், ஏனைய தேசங்களும் அவ்வாறே பீடிக்கப்படும் என்ற நிச்சய அறிவு நம்மனோர்க்கு ஏற்பட்டுள்ளது. ஜனசமூகத்தில் பிரதி ஜீவனுக்கும் போதிய கல்வியும், பொருளும், ஆகாசமும் ஏற்பட்டாலொழிய ஜீவர்கள் தமது வாழ்க்கையின் பலனைப் பூரணமாய்ப் பெற முடியாதென்ற வுணர்ச்சி தற்போது பலப்பட்டு வருகின்றது. எனவே, இவை மூன்றையும் அவர்கள் பெறுமாறுள்ள முயற்சிகள் எங்கும் செய்யப்பட்டு வருகின்றன. பாரிஸ் நகரத்தில் கூடின சமாதானக் கான்பரென்சில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள் ஓர் புதுவுலகையே ஏற்படுத்துமென எதிர்பார்த் திருந்தனர். அவ்வாறு பூரணமாய் நடைபெறுவிடினும் தேசங்கள் ஒன்றிற்கொன்று யுத்தஞ்செய்து கொள்வது ஓர் அநாகரிகமான கொடிய வழக்கம் எனவும், சமாதான முறைகளைக் கைக்கொள்வதே உசிதமெனவும், எந்நாட்டினுமுள்ள ஜனத் தலைவர்கள் உணர்ந்திருக்கின்றனர். அவ்வாறுயினும் மனிதர்கள் சுயநலங் கருதுந்தன்மை சுலபமாய் மாறுவதில்லை.

11. ஓர் அரசாங்கத்திற்குள் பிரஜைகள் ஒருவர்க்கொருவர் கட்சி, கலக முதலியனசெய்து கொண்டால் அக்குற்றங்களை விசாரிக்க எவ்வாறு நியாயஸ்தலங்கள் ஏற்பட்டுள்ளனவோ அதுபோன்றே. தேசங்கள் பலவும் ஒன்றிற்கொன்று மனத்தாங்கலடைந்து சச்சரவு தொடங்கினுல், அவ்விவயங்களை உண்மை துலங்குமாறு சர்வதேச சம்பந்தமான பொது நியாயஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற அவா உதாரகுணமுடைய ராஜதந்திர கௌன்சிலரால் தெரிவிக்கப்பட்டு பொது ஜனங்கள் அப்பிரேரணையை உற்சாகமாய் ஆமோதித்தது தற்கால வியல்பினை நமக்கு நன்கு விளக்குகின்றது. சகோதரதர்மம் அல்லது ஒற்றுமை உலகில் சீக்கிரம் எவராலும் பயிலப்பெறு மென்பதை இஃது காட்டுகின்றது.

12. ஆனுல், நவீன நாகரீகத்தில் தீமைக ளில்லையென்பது பிழையாகும். பல பெருங்குறைகள் அதனிடம் உள்ளன. தீமைகள்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

அல்லது குறைகள் என்பவற்றை நாம் மேற்கொண்டேதான் முன்னேற்றம் அடைகின்றோம். உலகின் எப்பருவத்திலும் இவை இராமலொழியா. இவற்றை வெற்றிகொண்டு நாம் அபிவிருத்தி யடையவேண்டு மென்பது இறைவன் திருவுளம்போலும் தற்கால வுலகப்பாங்கிலுள்ள குறைவுகள் மானிடவர்க்கத்தின் சிசுப்பருவத்திற்கு ஏற்றவைகளல்ல. அவை வாலிபப் பருவத்திற்குரியன. எனவே நாம் சிசுப்பருவம் கடந்து விட்டோமென்பது நிச்சயம். உலகெங்கும் பெருங்கிளர்ச்சிகள் தோன்றும்போது, அவற்றிற்குச் சமமான இடையூறுகளும் தோன்றுவது சகஜமே. பாற்கடலைக் கடைந்து திருவமுதம் புசிக்குமாறு, தேவர்களும் அரசர்களும் பிரயத்தனஞ்செய்த காலத்தில், ஆலகாலவிடம் முதலிற் றோன்றியது, அதன்பின்னர் அமுதும் தோன்றியது. நாம் முன்னேற்றம் பெறவேண்டுமாயின் அதனைப் பெறுவதற்குக் கிரயம் யாதெனின் இவ்விடர்கள் பொடியாகுமாறு நாம் செய்யும் முயற்சியேயாகும். பெருந்தீமைகள் உலகை விழுங்குவதுபோல் தோன்றுங்காலத்தில், அதனோடு பெருத்ததோர் நன்மையும் விளையும். உண்மையில் நன்மை யென்பதே உலகில் நீடித்து நிற்பது. தீமையென்பது நன்மையின் சாயையென்னலாம். அபிவிருத்தி யென்பது இறைவன் ஆணையாகும். மேற்கூறிய காரணங்களால் நாம் குழந்தைப்பருவம் நீங்கி, வாலிபப் பருவத்தின் உத்தரவாதத்தையும் கடமையையும், அவற்றாலுண்டான ஆனந்தத்தையும் பெற்று முன்னேற்றமடைய முயல்கின்றோம். என்பது விசிதமாகும் தற்போது அஞ்ஞானவிபரீத நள்ளிருள்நீங்கி, அருணோதயம் சமீபித் திருக்கின்றது. உஷாதேவியே, உனது மாமலரடிகட்கு வந்தனம்! புதிய நல்லுலகே! உன்வரவு நல்வரவாகுக! இறைவனே, உமது ஆனந்த சங்கற்பம் அற்புதமாய் நடைபெறுவதாக. சுபமஸ்து.

R. பஞ்சாபிகேச ஐயர்.

---



## கடிதங்கள்.

"அன்னியரை தூஷணை சொல்லி அழையாதே
அதனால் வரும் பயனை அடையாதே."

ஸ்ரீமத் அகண்டபரிபூரண சச்சிதானந்த பரம்பொருளின் கிருபா நோக்கத்தால், இக்கடல் சூழுலகின்கண் ஆறறிவுடைய மானிடராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் ஒருவரை யொருவர் தூஷணை சொல்லாமல் அன்னியரையும் தன்னைப்போன்ற மானிடரெனக் கருதி "ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்" என்று சான்றோர் கூறியதை மறவாமல் நடப்பதே மானிடர்க்குரிய ஒழுக்கம், இஃதை கல்லாத மாந்தர்க்கு கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்.

இங்ஙனம், இத்தொல்லுலகி லுதித்த சில நேயர்கள் தன்னுடைய அற்பமதியால் அன்னியரைத் தன்னைப்போன்ற மானிடரெனக் கருதாமலும், கருணாநிதி யாகிய கடவுளின் அருளால் உலகிற்றோன்றிய எண்பத்து நான்குலட்சம் யோனிபேதங்க ளுண்டென்பதை உணராமலும், தற்போது சில மாந்தர்கள் கடவுளமைத்ததைக் கடந்து, மானிட ஜென்மமாய் எடுத்தவர்களை, மானிடரென் றுணராமல் கீழ்வருமாறு கூறி அழைக்கின்றனர். அதாவது பசுவென்றும், குட்டிச்சுவரென்றும், எருமைக் கிடாவே என்றும், கழுதையென்றும், குரங்கென்றும். பிணமென்றும், தடிப்பக் கட்டையென்றும், இன்னும் சொல்லுதற்கரிய நாமங்களைச் சொல்லி யழைக்கின்றனர். அந் நாமங்களின் சிறப்பை, திருப்புல்வயல் குருபாத தாசருளிய குமரேசர் சதகத்தில் கூறியதை பின் வருமாறு காண்க.

"பசுவாகிலுங் கனவிபூதி விளைவிக்கும் பழமைபெறு சுவராகிலும்,பலருக்குமறைவாகு மாடுரிசிஞ்டு மலம்பன்றி கட்குபயோகமாம். சகமிகு கடாவென் னிலுழுது புவிகாக்குவென் கழுதையும் பொதி சுமக்குங், கல்லெனிற் றேவர்சட் காலயமு மாம்பெருங் கான்புற்று மாவமணையாம், இதமிலாச் சவமாகிலுஞ் சிலர்க்குதவி செயுமிழிவுறு குரங்காயினு மிரக்கப் பிடித்தவர்க்குதவி செயுமாறு கோலேற்ற வாளிகை விளக்கும், மதமது மிகும்பாம லோபரா லுபகாரமற் றொருவருக்கு முண்டோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே."

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

என்று சான்றோர் கூறியிருக்கின்றனர். அன்றியும் அந் நாமங்களைச்சொல்லி அழைப்பதினால் வரும் சொல்தூஷணையைச் சான்றோர் சற்றும் ஏற்றுக்கொள்ளார். ஏனெனில் அந் நாமங்களைச்சொல்லி அழைப்பவரே அம்மரபிற் குரியராவர் என்று இராமச்சந்திர கவிராயர், கீழ்வருமாறு கூறுகின்றனர்.

“கல்லா லயமாந்தே வழிமாங் கழுதை கசடர்பொதி சுமக்குங், கடாவோ வுழுதுபயி ரிடற்காங்கட்டம் பன்றிக் கிரையாகும், புல்வேறீசர் வாயனமாம் பொதிசுமக்கும் பிணமெனிலே, பூசை முடித்து மறையோர்க்குப் பொருளையீந்து புகழெய்தும், மல்லா குட்டிச் சுவரெனிலோ மாடுமுரைஞ்சு மறைவாகும். மதியாத் துடைப்பந் தானெனிலோ மாடகூடந் தனைவிளக்கும், அல்லாது அத்தன்றணக் கிணையாரை யுரைப்பேன் புவிமீதில், அவனைக் குறித்து கூறவிடத்துக் கவனே சரிதானே.”

என்று இவ்விதம் கவிவல்லோர் கூறியிருப்பதால், கண்ணில்லா மாந்தர்க்கு சிற்றறிவுடைய யான்மதி யெடுத்துரைக்க மிகையாம். ஆகையால், என தன்பிர்க்குரிய சகோதர சகோதரிகளே! இனியேனும் நமது உலக நீதியில் கூறுகின்ற “ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்,” என்ற நீதிவாக்கியத்தை சிரமேற் கொண்டும் நம் முலகஞான மாதாவாகிய ஔவை பிராட்டியாரின் அமுதவாக்காகிய “பொல்லாங் கென்பவை யெல்லாந்தவிர்” “கீழோராயினுந் தாழவுரை” என்ற வேதவாக்கியத்தைக் கடைப்பிடித்து அவ்வழி நடந்து கனம் பெறுவதாக எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாராக.

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை.

---

## ஓர் வேண்டுகோள்.

அறிவிற் சிறந்து அருந்தவ மணிகளாயுதித்த க்ஷத்திரிய நாடார் குலச் சிகாமணிகாள்!

இக் கடல்சூழ்ந்த பூவுலகின்கண் நம்மனைவர்க்கும் நடுவில் ஓர் அற்புத சக்திதோன்றிப் பிரகாசித் துலவுவதை நம்மி லறியாதார் யார்? அவ்வண்ணமே நாமும் நங்குல மேன்மையைக் கருதி நம்மில் தாழ்ந்தோரை உயர்த்தி இவ்வுலகுக்கே ஓர் திலகம்போல் நம்மை பிதர ஜாதிகளின் முன் விளங்கச்செய்ய வேண்டாமா? அது விஷய



மாய் யிதுவரை நம்குல பெரியோர்கள் பல கூட்டங்கள்கூடிப் பேசுவதே யொழிய சிறு கிருமங்களில் சென்று உபந்நியாசித்து யாவரையும் தூண்டுதல்செய்து உற்சாகப்படுத்தி அன்னோர்களுக் கேற்படுங் குறைகளை நிவர்த்தித்தாய் யிதுவரை யறியோம். ஆயினும் நம் ஜாதி மேன்மைக்காக தன் உத்தியோக பதவியையும் விட்டுவிட்டு அபிமானம் பூண்டவராய் தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் ஜாதிக்காகத் தத்தஞ்செய்து உழைப்பேனென்று கங்கணம்பூண்டு முன்வந்து வடபாகம் பற்பல யிடங்களிலும் பிரசங்கித்துவரும் ம-ா-ா-ஸ்ரீ, P. பழனிவேல் நாடார் B. A., அவர்களைப்போன்று பல சிங்கங்கள் தோன்றி பற்பல சிறு கிருமங்கள்தோறும் (முக்கியமாய் தென்பாகங்களிலும்) சென்று ஆங்காங்கு யெழுப்புதலான உபந்நியாசங்கள் செய்து வருவதுடன் அவ்வவ் விடங்களில் நம் நாடார்குல மித்திரனையும் வேரூன்றச்செய்து தாழ்ந்தவர்களை உயர்த்துவதற்குரிய கல்வி, கைத்தொழில், வியாபாரம், முதலிய பேருதவிகளை ஆங்காங்குள்ள பெருந்தனம் படைத்த பிரபுக்களால் பரவச்செய்தும் அடிக்கடி நினைப்பூட்டி வருவார்களானால், நம்குலம் அதிசுருக்கில் உன்னதநிலைமைக்கு வந்துவிடும்.

ஆகையால் இதனைக் கண்ணுறும் குலாபிமானிகள் யாவரும் தங்கள் தங்களாலியன்ற பேருதவிகள் புரிந்து உபந்நியாசர்களாய் வெளிவருங் கனவான்களை அன்புடன் வரவேற்று ஒத்தாசை செய்வதுமல்லாமல் நம்குல முன்னேற்றத்திற்காக அபிமானத்துடன் முன்வந்து க்ஷத்திரிய தர்மத்தை நிலைநாட்டும்படி அன்புடன் வேண்டுகின்றேன். இவ்வண்ணம் வெளிவருங் குலாபிமானிகளுக்கு தீர்காயுளையும் அருள் நிறைந்த வல்லமையையும், சர்வஜீவ தயாபரனாய் விளங்கும் சாக்ஷாத் பெம்பெருமான் திருவருள் புரிவாராக. சுபம்!

சு. ஆ. பேரின்ப நாடார்.

---

## நமக்கோர் நல் விஷயம்.

கடல்சூழ்ந்த இப்பரத கண்டத்தின் தென் கோடியில், சந்திர குலத்தில் தோன்றி, நாடார்கள் என்னும் பட்டப்பெயர் தாங்கி, திரண்ட செல்வங்களுக்குத் தலைமைபூண்டு, கல்விக் கேள்வியிற் மேன்மை பெற்று, உயர்பதவிநல்கி, வியாபாரம், விபசாயங்களில் பாண்டித்ய மடைந்து, அன்பினுபரணந் தரித்து, எம்மரபில் தோன்றி, வளர் பிறைபோல் செழித்து வாளாநிற்கும், நாடார் சிம்மங்காள் நாம்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

இப்போது நாகரீகமென்னும் நவீன நூற்றாண்டுக்குள் நுழைந்துள்ளோம். இந்நிகழ் நூற்றாண்டோ, வருணாச்ர தருமம், தன்குலத்தை முன்தூக்குதல், சுயநலம், கபடமுதலிய துஷ்கிருத்தியங்களைத் தன்னகத் தடக்கியுள்ளது. இப்படிப்பட்ட விநோத காலத்தில் எம் குலத்தவர்களே நீவிர் தூங்கி இளைப்பாறுதல் நலமோ? படுக்கையை விட்டு விழித்து, மற்றும் எம் பெரியோர்களைப் பின்பற்றி நடவுங்கள்.

நாம் துயிலுறுவோமானால், நம்மை முன்சென்ற குலத்தவர்கள், ஓர் கோபாகாரமுடைய சிம்மம்போல் நசுக்கி விடுவார்கள். இப்போதோ "சுயராஜ்யம். சுயராஜ்யம்" என்னும் ஓர்கதறுதல் ஓர்பக்கத்திலும், "வகுப்புவாரி. வகுப்புவாரி" என்னும் கூக்குறல் பிறிதோரிடத்திலும், நமது காதுகள் செவிடுபடும்படி கேட்பதை யறியீர்களோ? செல்வர்காள்! இச் சப்தமானது நமக்கு நாராசத்தைக் காய்த்து விட்டது போலிருக்கிறதோ? அல்லது அப்பதங்களைத் தானறியீர்களோ? பரிதாபம்! நீங்கள் யாவரும் அறிந்திருப்பீர்களென்று, சங்கல்பம் செய்துள்ளேன். அவ்விதம் அறிந்த நாடார் சிகாமணிகள் எப்பக்கம் சார்ந்து நாம் வேலை செய்வது நலம் என்று அறியாது திப்பிரமை கொண்டிருப்பார்களோ? நாம் அறிகின்றிலேம்.

ஆனால் நாம் ஓர் பக்கமுஞ்சேராது நரியின் தந்திரம் கொண்டிருத்தல் நலமாகத் தோன்றவில்லை. சகோதரர்காள் நாம் பொதுவாகவிருந்து ஓர் பயனுமடையப் போவதில்லை. "பொதுவாக வள்ளுவன் புழுத்துச் சாவான்" என்ற பெரியோர் முதுரைக்கு நாம் நிதரிசனமாகவேண்டும். ஆகையால் நாடார்குல நறுமலர்காள், நீங்கள் யாவரும் ஓர் பக்கஞ்சேர்ந்து, அப் பக்கத்தில் விடாமுயற்சியாலும், சகோதரத்வ சமத்துவத்தினாலும், ஒற்றுமையினாலும். ஒருமிச்ச வுழைத்து வரப்போகும் அதாவது 1921-ம் வருஷத்திய புது கவர்ண்மெண்டில், நங்குலத்து நன்மணிகள் இருவரை, நாமே ஓட்கொடுத்து புதுச் "சட்டசபையில்" யாவருக்குஞ் சமமாய் அமையுமாறு, வேண்டிய பிரயத்தனங்கள் செய்து காரியசித்தி யடையுங்கள்.

நாம் இப்போது நங்குலத்தைச் சீர்கேடான நிலைமைக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் புரியும், சுயநெஞ்சகமும், துஷ்கிருத்தியமும் மமதையும், ஜாதி வித்யாசமும், தீண்டாதே என்று சொல்லும் கெட்டகுணங்கள் ஒருங்கே அமைந்த ஜாதியாரோடு சேராது வள்ஊலையாம் நம் நாடார் குலத்தவர்களாகிய நமக்கு இடையறா உழைப்



பெடுத்து, உடல்வருந்தி, நமக்காக இங்கிலாந்து தேசம் சென்று படாத பாடுபட்டு. நங்குலத்தைச் சீர்தூக்க வேண்டிய பிரயத்தனங்கள் புரிந்தவர்களும், ஜாதி வித்யாசமில்லாது சகோதரத்வ, சமத்வ சிந்தை, தயாளம், ஒற்றுமை முதலிய நற்குண நற்செய்கைகளைக் கொண்டும், மருத்துவத்தில் நிபுணகலைவனை முதன்மையாகப் பூண்டெழுந்த, நம் சகோதர கூட்டத்தில் ஒருமிக்கச் சேர்ந்து உழைத்து நீவீர் நீடூழிவாழ்மின்.

எனது சந்திரகுல பாண்டிய வம்சாதிபதிகளே, இவ்வித நற்காலத்தை இழந்து விடுவீர்களானால், நமக்கு இதைப்போல் நற்காலம் கிட்டாது என்பது திண்ணம்.

ஆகையால் நறுமலர்கூட்டி, நடுநாயகமாய் விளங்கும், நற்குலத்து நாடார் சிகாமணிகாள். மார்தட்டி எழுந்து, முன்னே குதித்து, நமது குலத்தில் இரு சன்மணிகளை அச் சட்டசபையில். நமக்கு நன்மை பயனுமாறு அமையச்செய்ய. இடையறா நன்முயற்சி செய்து சித்தி பெறுமின். அவ்வித விடாமுயற்சி யெடுப்பீர்களானால், நீவிர், உம் குடும்பத்திற்கு மாத்திரமல்ல, இப்பாத கண்டத்திற்குச் சாத்தியமான உதவி புரிகிறவர்களாகப் பாவிககப் படுவீர்கள் என்பது திண்ணம்.

உங்கள் யாவருக்கும் மன உர்ச்சாகத்தை எல்லாம் வல்ல இறைவன் அருள்வானாக. சுபம்!

ஏ. ராஜநாயகம்.

---

## வஸ்திர தானம்.

இரங்கூன் லோயர் பசுமந்தான் இந்திய தர்ம பாடசாலையில் 160-குழந்தைகள் இனமாக கல்விகற்று வருகிறார்கள். அதில் 45-ஆதரவற்ற ஏழைக் குழந்தைகள் போர்டிங்கி லிருக்கிறார்கள். அந்தக் குழந்தைகட்கு, கல்வி. அன்னம், வஸ்திரம் புஸ்தகம் முதலியன யாதொரு செலவின்றி இனமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

இவ்விரங்கமா நகரில் 28-வது வீதி 40-நெ. கிரகத்தில் வசிக்கும் தனவர்த்தகரும் தர்மதயாள குணசீலரும், இரங்கோன் இந்து நாடார் மஹாஜனசபை மானேஜருமாகிய ஸ்ரீமான், வை. மு. முத்துக் குமாரு நாடாரவர்கள் சென்ற 14-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை 3-மணிக்கு இத்தர்ம பாடசாலைக்கு விஜயஞ்செய்து இதில் கல்வி கற்றுவரும்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

45-சிறுவர் சிறுமிகட்கும் போர்டிங் ஸ்கூல் பண்டாரிக்கும் பிரம்பு
வேலை கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயருக்கும் அவர்களின் நன்
மையையும் சுகவாழ்வையையும் கருதி வஸ்திரதானஞ் செய்த பேரன்
பிற்காகவும் தர்மதயாள குணசிந்தைக் காகவும் இத்தர்ம பாடசாலை
யில் கல்விகற்கும் ஆதரவற்ற ஏழைக் குழந்தைகள் தங்கள் நன்றியை
யும் விசுவாசத்தையும் ஸ்ரீமான், வை. மு. முத்துக்குமாரு நாடாரவர்
களுக்கு செலுத்துகிறார்கள். இத்துடன் இத்தர்ம பாடசாலை குழந்தை
கட்கும் அச்சமயம் சபையில் வந்திருந்த மற்றெல்லோருக்கும் மிட்
டாய்கள் வழங்கப்பட்டன.

ஸ்கூல் தாவான்களுக்கும் ஸ்ரீமான், வை. மு. மு. அவர்கள் சன்
மானம் அளித்தார்கள். கூட்டம் 14-ந்தேதி 3-மணிக்கு ஆரம்பித்து
முதலாவது கடவுள்பேரில் பாடல்கள் பாடப்பட்டது. அதன்பின்
ஸ்ரீமான் வை. மு. மு. அவர்கள்மீது சிறப்புக்கவிகளும் இரண்டாவது
ஸ்கூல் ரிப்போர்ட்டும் வாசிக்கப்பட்டு ராஜ வாழ்த்துக்கவிகள் பாடி
4-30 மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது. எல்லாம் வல்ல இறைவன்
ஸ்ரீமான் வை. மு. மு. அவர்கட்கும் மனைவிமக்கட்கும் நீடூழி ஆயுளைக்
கொடுக்கும்படி பிரார்த்திக்கின்றனன்.

எஸ். ஆர். வெள்ளைச்சாமி பிள்ளை.
மானேஜர்.

---

## நாடார்குல முன்னேற்ற மென்னும் உலகத்திற்கு போக ரகசிய பாதை.

எனதன்பார்ந்த நாடார்குலப் பெரியோர்களே! நண்பர்களே!!

நான் உங்கள் குலத்தில் பிறந்தவனாக இல்லாவிடினும் இந்தியர்
கள் பாரதமாதாவின் புத்திரர்கள் என்ற எண்ணத்தாலும் உங்கள்
குலத்தோர் மேலுள்ள அன்பின் பெருக்காலும் சில விஷயங்கள்
நாடார்குல மித்திரன் மூலமாய் விடுக்க ஆசைகொண்டேன். உங்கள்
குலத்தவர்களால் நடத்தப்பட்ட "விஜயவிகடன்" திராவிடாபிமானி,
வித்தியாவதி, ஞானோதயம் முதலியவைகளாலும் நடைபெற்றுவருகிற
நாடார்குல மித்திரன் க்ஷத்திரியகுல மித்திரன் ஏனையோர்களால் நடத்
தப்படும் இந்து, சுதேசமித்திரன், தேசபக்தன், திராவிடன் யம்பயா
கிரானிகள், பம்பாய் டைம்ஸ் ஆப் இல்லஸ்ட்டட்வீக்ளி முதலிய
பத்திரிகைகள் மூலமாகவும் நெருங்கிய பந்துக்கள் போன்ற உங்கள்
குல என் ஆப்த சிநேகிதர்களாலும் உங்கள் குலத்தைப்பற்றி நான்



விஸ்தாரமாக தெரிந்திருக்கிறேன் உங்களுக்கு ஏராளமான பொது
வருமானங்கள் பொதுச் சொத்தும் அதின் வருமானங்களு மிருக்
கின்றன ஆங்காங்கு பல தர்மஸ்தாபனங்கள் (கோவில்கள், பள்ளிக்
கூடங்கள், நந்தவனங்கள், தண்ணீர் பந்தல்கள், பிரயாணிகள் தங்கு
மிடங்கள், புத்தக சாலைகள், பத்திரிகை வாசிக்கு மிடங்கள். விளக்கு
தண்டுகள், முதலியன) ஏர்ப்படுத்தி இருக்கிறீர்கள். ஆயினும் சில வரு
ஷங்களாக உங்கள் தலைவர்களின் ஒற்றுமை சிறிதுகுன்றி பல துறை
களிலும் முன்னேற்ற மடைவது தடங்கலாகியும் கண்டபடி பணம்
செலவாகியும் சரியானபடி பண (மகமை மூலமாகவும் வாடகைமூல
மாகவும்) வசூல் இல்லாமல் ரெம்பவும் குறைபட்டதோடு பல இடங்
களில் உள்ள பொதுச் சொத்துக்கள் சரியானபடி மேற்பார்வை இல்
லாமல் கண்டவர்கள் கையில் அகப்பட்டு சிதைந்து போய்விட்டது
உதாரணமாக க்ஷத்திரிய மித்திரன் 5-வது நம்பர் மார்கழி மாசப் பத்
திரிகையின் கடைசியில் சென்னிமலை சான்றோர் மடம் என்ற தலைப்
பின்கீழ் உள்ள விஷயமே போதுமான அத்தாட்சியாகும் இன்னும்
உங்கள் குலத்தவர் வசிக்கும் வேறொரு சிறுகிராமங்களிலும் கூட
சரியான வரும்படி கிடைக்கக்கூடிய இடங்களில் பொது ஸ்தலங்கள்
இருந்து கைப்பற்றப் பட்டிருப்பதாகத் தெரிகிறது இக்குறைகளெல்
லாம் நீங்கி நல்லகாலம் வருவதர்க்கான அறிகுறிகள் முன்னமே காட்
டுவதுபோல் உங்கள் தலைவர்களில் சிலர் தங்கள் தங்கள் ஊரில் தங்க
ளுடைய வம்புச் செயல்களை விட்டுக்கொடுத்து ஒத்துவாழ எண்ணங்
கொண்டிருப்பதாக அறிவதோடு பல இடங்களில் சங்கம் ஏர்ப்பட்
டும் சில இடங்களில் சங்கம் ஏர்ப்படுத்த உத்தேசிப்பதாயும் தெரிந்து
மிக சந்தோஷிக்கிறேன். சங்கத்தை ஏர்ப்படுத்துவதும் பிரசங்கம்செய்
வதும் வருஷக் கொண்டாட்டம் கொண்டாடுவதுமாக இருந்துவிட்
டால் மட்டும் போதாது ஆபிரமணக்கு பிரசங்கத்தைக் காட்டிலும்
அரைபலம் அனுஷ்டானமே சிறந்தது எனது இந்தியமாதாவின் தவப்
புதல்வர்களில் ஒருவரான சுவாமி விவேகானந்தர் சொல்லி இருப்ப
தால் சிறிது நேரமாவது உள்ளன்புடன் "பெரியோர்களும் நண்பர்க
ளும் ஒத்து உழைத்து ஏர்ப்படுத்தப் பட்டிருக்கும் சங்கங்களை மென்
மேலும் விருத்தியாக்கியும் சங்கங்கள் இல்லாத ஊர்களில் சங்கங்கள்
ஏர்ப்படுத்தியும் காரியங்கள் செய்வீர்களானால் என்றும் அழியாப்புக
ழடைவீர்கள். காளயுக்திஸு வைகாசிமீ 26உ சனிக்கிழமை வெளி
யான மதிப்புவாய்ந்த சுதேசமித்திரன் பத்திரிகையின் தலையங்கம்
டிஷ் தலையங்கத்தின் நகல் நாடார்மஹாஜன சங்கம் 4-வது கான்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## சில்லரைக் குறிப்புகள்.

"உத்தியோகமாறுதல்" மதுரை டிப்டி கலெக்டர் கனம் அன்புடையான் நாடார் அவர்கள் புதிய அரசியல் சீர்திருத்தக் கமிட்டியில் ஒருவராக நியமனம் பெற்றிருக்கின்றார்.

"நாடாரே வருகிறார்" ஷை அன்புடைய நாடார் அவர்கள் வகித்த மதுரைச் ஜில்லா டிப்டிகலெக்டர் ஸ்தானத்திற்கு சேலம் ஜில்லா வாண்டு ரிக்கார்டு தாஸில்தார் மிஸ்டர், எம். டேவிட் நாடாரவர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

"நிலக்கோட்டை" மிஸ்டர் பி பழனியப்ப நாடாரவர்கள் திண்டுக்கல் தாலுக்கா போர்டு மெம்பராகத் தெரிந்தெடுத் திருப்பதா யறிகிறோம்.

"மதுரைக்கி வருகிறார்" திருச்சி ஜில்லா போலீஸ் சூப்ரின்டெண்டின் பர்ஸனல் அஜிஸ்டண்டும் அக்டிங் போலீஸ் டெப்டி சூப்பரின்டெண்டுமான மிஸ்டர் ஜே. எஸ். தேவதாஸ் நாடாரவர்கள் மதுரைச்ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டின் பர்ஸனல் அஸிஸ்டெண்டாக நியமனம் பெற்றிருக்கின்றார்.

"பிரஸிடெண்டு" தஞ்சை ஜில்லா மாயவரம் தாலுகா போர்டு பிரஸிடெண்டாக மகாகனம் என். டேவிட் நாடாரவர்கள், தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார்.

"பெருநாழி" இவ்வூர் கனம். ஆ. குமரையா நாடாரவர்கள் தலைமையின்கீழ் 1-3-20-ல் பால்யநாடா ரபிவிர்த்தி சங்கம் ஒன்று ஏற்பட்டு அன்று பல உபன்யாசங்கள் நடை பெற்றதா யறிகின்றோம்.

"சாரைக்கால்" நமது மித்திரனைக் கண்ணுற்ற ரத்தினங்கள் அத்தினமே க்ஷத்திரியகுல பால்யசங்கம் ஒன்று ஏற்படுத்தி யிருப்பதாயும் முன்னேற்பட்டு சீர்கேடா யிருந்த வாசக சாலையையும் திருத்தம் பண்ணப் போவதாயும் சுதேசமித்திரன், தேசபக்தன், முதலிய பத்திரிகைகளும் வாங்கி படிக்க ஏற்பாடு செய்திருப்பதாயும் அறிந் தக மகிழ்கின்றோம்.



"7000ம் பண்ணை" இவ்வூரில்சாத்தூர் பால்ய நாடார்களுடைய முயற்சியால் ஸ்தாபிக்கப்பெற்ற இந்துநாடார் பாடசாலையில் ஆரம்பத்தில் 38, பிள்ளைகளே சேர்ந்திருந்ததாகவும் தற்சமயம் 91 பிள்ளைகள் மிக ஊக்கத்துடன் படித்து வருவதாக அறிகின்றோம்.

"நாகலாதபுரம்" இவ்வூரில் மார்ச்சுமீ 1௳ க்ஷத்திரியா வித்தியாசாலை யென்ற ஓர் கலாசாலை புதிதாக நியமனமாகி அவ்வூர் சப் ரிஜிஸ்டரார் கனம், வேம்புவய்ய ரவர்களால் திறந்துவைக்கப் பட்டிருக்கின்றது இப் பாடசாலை விஷயமாய் அவ்வூர் நாடார்கள் விடா முயற்சி யெடுத்துழைத்து மேன்மைக்குக் கொண்டு வரும்படி கோருகின்றோம்.

"வந்தனம்" நமது மித்திரனையும் நம்மையும் வாழ்த்தி அனேக வித்வான்கள் பாக்களெழுதி யனுப்பி யிருக்கின்றார்கள். அவைகள் பதிப்பிக்க முடியவில்லை யென்பதை வந்தனத்துடன் தெரிவிக்கின்றோம்.

"வதுவார்பட்டி" இவ்வூரில் நாடார்மகாஜன கிளைச்சங்கம் ஸ்தாபித்து வாரந்தவறாமல் கூட்டம் நடத்தி வருவதாய்த் தெரிகின்றது.

"மதுரை" 14-3-20. மாலை 4-மணிக்கு நாடார் மகாஜன சங்கம் கௌன்ஸில் மீட்டிங்கு ஷை ஆபீசில் ஷை வைஸ்பிரஸிடெண்ட் பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான், ஊ. பு. அ. மாரிமுத்து நாடார் அவர்கள் தலைமையின்கீழ் கூடப்பட்டது. வெளியூரிலிருந்து அனேக மெம்பர்கள் வந்திருந்தார்கள்.

புதிய சீர்திருத்தப்படி சென்னைச் சட்டசபையில் நாடார்களுக்கு 3-மெம்பர்களாவது இருக்கவேண்டு மென்பதை மாட்சிமை தங்கிய கவர்னரவர்களுக்கு விண்ணப்பம் தயார்ச்செய்து சில பிரதிநிதிகளை நேரிலனுப்ப வேண்டுமென்றும், வருகிற சித்திரைமாதம் 9௳யில் ஸ்ரீமான் ஊ. பு. அ. மாரிமுத்து நாடாரவர்கள், ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமி நாடாரவர்கள், ஸ்ரீமான் மொ. சி. ஆ. சிதம்பர நாடார் அவர்களுடன் மற்றுஞ் சில கனவான்களும் வெளியூர்களுக்குச் சென்று தலைக்கட்டுவரி வசூலிப்ப தென்றும் புதிய ஓட்டர் சாபிதாக்கள் தயார்ச்செய்து பிரசாரவேலை செய்வதென்றும் தீர்மானிக்கலாயிற்று. இவர்கள் பேச்சளவு நின்றுவிடாமல் காரியத்தில் காட்டுவார்களானால் இந்நாட்டில் எக்காலும்புகழ் கொண்டிலங்கா நிற்பர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

"கமுதி" கொள்ளைக்கேஸ் இரண்டாவது 30பேர்களில் 20-பே களுக்கு 3-வருஷ முதல் 7-வருஷம் வரையும் தண்டிக்கப்பட்டும் 1 பேர்கள் விடுவிக்கப்பட்டு மிருக்கிறார்கள். பாக்கிப் பேர்கள் விசாரணை யிலிருக்கிறார்கள்.

"பிழைதிருத்தம்" 6-வது பத்திரிகையில், கமுதியில் சலவா கமுதி கலகக்கேஸ் என்றிருப்பதை கமுதியில் கொள்ளை கமுதி கொள்ளைக்கேஸ் என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும். அச்சாபீ நமக்கு வெகு தூரத்தி லிருப்பதால் இப்படிப் பல பிழைகள் அடி கடி நேர்ந்துவருவதென்பதை நேயர்கள் நன்கறிந்துகொள்வார்களா

"நமது அச்சாபீஸுக்கு நன்கொடை" விருதுபட்டி பங்கஜவி சம் வித்தியாபிவிர்த்தி சபை காரியம் ம-ா-ா-ஸ்ரீ. K. P. சங்கரலிங் நாடாரவர்கள் ரூ. 3 0 0-

"வினாவிடை" 6-வது பத்திரிகையில் மிஸ்டர் கூ. கா. கூ. சின் மணி வினாவிற்கு தூத்துக்குடி தாயுமானசுவாமி நாடார் திருவனந் புரம் என்று சரியாய்ச்சொல்லி யிருக்கிறார். பின்னும் 72-பேர்க அதே வண்ணம் எழுதி யிருக்கிறார்கள். ஒருவர் தந்தி மூலமா விடைதந் திருக்கின்றார். 2-வதுசெல்லையா வினாவிற்கு ரெயில் 4-மணி நேரத்தில் போய்ச் சேருமென்று 24-பேர்கள் எழுதி யிருக்கிறார்க அவரவர்கள் பெயர் எழுதயிடங் கொடுக்கவில்லை.

7-வது பத்திரிகையில் E. S. சிவராமலிங்கம் பிள்ளையவர் வினாவிற்கு ப. உ. ஆ. உலகமேற் சஞ்சர நாடாரவர்கள் நாடார்கு மித்திரன் (10-எழுத்துள்ளது) என்று முதலாவது எழுதியனுப்பிவி டார் பின்னுமனேகர் அதே வண்ணம் எழுதியு மிருக்கிறார்கள்.

பத்திராதிபர்.

---

## இலங்கை நாடார்களும் சங்கமும்.

நெடிய கடல்சூழ்ந்த பூவுலகின்கண் குபேரபட்டணமாகிய இ விலங்கையிற் பிரபல வர்த்தகஞ்செய்யும் நாடார்களுக்குள் இரு ஐக்கியத்தின் காரணமாக அனேக குலாபிமானிகளின் ஆலோசனை படி இந்திய க்ஷத்திரியகுல நாடார் சங்கம் என்று ஒரு சங்கம் ஏற் டுத்தி பிரபல வர்த்தகர்களான புரக்கோட்டை சி. பொ. ம. பொன் யாநாடார் அன்பிரதர்ஸ், இ. ப.கோ. கோவிந்த நாடார் அன்பிரதர் ம. து. தா துரைச்சாமி நாடார் அன்பிரதர்ஸ், ரா. ம. ஆ. ஆறு நாடார், ஆ. பா. வெ. வெள்ளையா நாடார், கு. சு. நா. சு. சுப் மணிய நாடார், சு. ந. மா. நா. ஏ நாராயண நாடார். இன்னும் கனவான்களும், பால்பட்டி ரூ. போ சேப்புநாடார் முதலிய கனவான் களும், கொள்ளுப்பட்டி முகத்துவாரங்களிலுள்ள பலவியாபாரிகளும், ஊட்டுப் பகுதியிலுள்ள வியாபாரிகளில் பல கனவான்களும், குலாபி மானத்தோடு ஊக்கமாய் நடத்தி வந்ததையறிந்து என்போன்ற புல நாடார் குலத்தவர்களுக்கு உண்டான ஆனந்தமும் அகமகிழ்ச்சியும் அளவிடத்தக்கதன்று. ஆனால் ஷை சங்கம்தோன்றி 2-வருடம் பூர்த்தி யாவதற்குள் நாடார்களின் ஒற்றுமைக் குறைவால் க்ஷீணதிசை படைந்திருக்கிற தென்பதை செவிமடுத்து கேட்போருக்கு பெருங் கிலேயும், ஆறாத்துயரத்தையும் உண்டுபண்ணுவதாக யிருக்கிறது. அந்தோ எவ்வித நோக்கத்தோடு துவக்கினீர்களோ! அதே நோக்கம் நிறைவேறும்வரை எவ்வித இடையூறுகள் நேரிடினும் சகித்து தளா ராத ஊக்கத்துடன் பிரயாசை யெடுத்து ஒற்றுமையுடன் நடத்தி வந்தாலல்லவா எடுத்த காரியத்தில் சித்திபெறவும் நம்சாதி மேன்மை யடையவும் வர்த்தகமுதலிய பல விஷயங்களிலும் விருத்திபெறவும் சாத்தியமாகும். இஃதன்றி "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதி லார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்னும் வாக்கியத்தையும் கவனியாமல் ஒன்றைத் துவக்கிவிட்டு பின்னதற்கு பின்னடைவோ மானால் எவ்வளவோ கௌரவக் குறைவு நேரிடுமென்பது கனவான் களுக்கு நான் சொல்லாமலே விளங்கும். ஆதலால் இலங்கையில் வசிக் கும் நாடார்குல கனவான்கள் யாவரும் இச்சிறியேனின் சிற்றறிவுக் கெட்டியவாறு எழுதிய சிறுவியாசத்தை தங்கள் தங்கள் பேரறிவால் உணர்ந்து பிழையிருக்கின் க்ஷமித்து ஜாதிய நன்மைக்காக தயோபகா ரத்தோடு பரோபகார சிந்தையையும் வகித்து இத்தகைய பொது விஷயங்களை தங்கள் தங்கள் சொந்தக் காரியங்களால் குணப்படுத்திக் கொள்ளாமல் நம்மால் துவக்கப்பட்ட இக் காரியத்தில் எவ்வித கஷ்ட மிருக்கினும் சகித்து பல கனவான்களையும் ஒற்றுமைப்படுத்தி சங்கத் திற்குரிய மகமை முதலிய சகல வருவாய்களையும் குலாபிமானத் தோடுமுன்வந்து ஒழுங்காய்ச் செலுத்தியும், மற்றவர்களை செலுத்தச் செய்தும், சங்கத்தை உன்னத நிலைமைக்கு கொண்டுவரப் பிரயா சைப் படுங்கள். வரும்மேமாசத்தில் நடக்கும் சங்கத்தின் 2-வது வருடப்பூர்த்தி கொண்டாட்டத்தை யாவரும் ஒற்றுமையுடன் அதி ஊக்கத்தோடும் குதூகலத்தோடும் வெகுசிறப்பாயும் நடத்திவைக்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.

சர்வஜீவ தயாபரனாகிய சாக்ஷாத் பரம்பொருள் நம்மவர்களுக் குள் ஒற்றுமையை நிலைநாட்டி நம் சங்கத்தை தினேதினே வளர் பிறைச் சந்திரனைப்போல் வளரக் கிருபைபுரிவாராக.

ஓர் குலாபிமானி,
கொழும்பு.

---



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## சங்கப் பூர்த்தி விசேஷங்கள்.

28-3-20-ல் விருதுபட்டியில் பிறையார் ஸ்ரீமான் ராவ்பகதூர் இரத்தினச்சாமி நாடார் ஞாபக சின்னவாசகச் சாலையின் 2-வது வருஷப் பூர்த்திக் கொண்டாட்டம் மதுரை வைக்கீல் ஸ்ரீமான் ஏ. பொன்னையா நாடார் பி. எ. அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் வெகு அலங்காரத்துடன் நடைபெற்றது.

3-4-20-ல் பாலையம்பட்டி பால்யநாடார் சங்கம் 2-வது வருடப் பூர்த்திக் கொண்டாட்டம் நாடார் மகாஜன சங்கம் மானேஜர் ஸ்ரீமான் P. பழனிவேல் நாடார் பி. ஏ. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் சம்பூரணமாய் நடைபெற்றது.

4-4-20, 4-5-20-ல் கமுதி வித்தியாபிவிர்த்தி சங்கம் நான்காவது வருஷப் பூர்த்திக் கொண்டாட்டம் நாடார் மகாஜன சங்கம் மானேஜர் ஸ்ரீமான் P. பழனிவேல் நாடார் பி. ஏ. அவர்கள்.

மதுரை வைக்கீல் ஸ்ரீமான் பொன்னையாநாடார் பி. ஏ. அவர்கள்

அபிராமம் நத்தம் ஸ்ரீமான் கான்பகதூர் விஜயன் அப்துல்ரஹிமான் அம்பலம் அவர்கள்.

இம்மூவர்களுடைய தலைமையின் கீழ் அறிஞர்கள் பலர் உபன்யாசக் கோஷ்டத்துடன் இனிது நிறைவேறியதாக வறிந்து சந்தோஷிக்கின்றோம்.

நாடார் மகாஜனக் கான்பரன்ஸ்:—இவ்வாண்டு தூத்துக்குடியில் கூடப்போகின்ற நாடார் மகாஜனக் கான்பரன்ஸுக்கு நாமுற்கூறியபடி ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடாரவர்களை உபசரணைக் கமிட்டிப் பிரதமச்சேர்மனக அங்குகூடிய ஆலோசனை மெம்பர்கள் தீர்மானித் திருக்கின்றார்கள். அவர்களுக்கு அடுத்தஸ்தானத்தில மா. வ. பீ. காசிச்சாமி நாடாரவர்களும் காரியதரிசியாக க. சு. மா. காளியப்ப நாடாரவர்களும் நியமிக்கப்பட்டு அதற்குரிய வேலைகள் யாவும் வெகு சுருராய் நடப்பதாகக் கேள்விப் படுகின்றோம். இவ்வருஷம் கான்பரன்ஸ் வெகு விமரிசையாய் நடக்கு மென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

வழக்கம்போல் தலைமை ஸ்தானத்திற்கு ஒருவரைத் தெரிந்தெடுத்து நாளுந் தேதியுங் குறிப்பிட்டு கூடிய சீக்கிரம் அழைப்புப் பத்திரங்கள் வெளியிடும்படி கோருகிறோம்.

பத்திராதிபர்.

---



## லண்டன் கடித மொழி பெயர்ப்பு.

ஐயா!

தூத்துக்குடி நாடார் ஐக்கிய சங்கத்தின் வருஷாந்தர உற்சவத்தில் ம-ா-ா-ஸ்ரீ, P. பழனிவேல் நாடார் B. A. அவர்கள் பீடம் வஹித்து, குலாபிமானத்துடன் செய்திருக்கும் எழுப்புதலான பிரசங்கத்தை நங்குல மித்திரன் வாயிலாய் வாசித்தகமகிழ்ந்தேன். மித்திரனின் 172-ம் பக்கத்தில் "புகைப்படம் பிடித்து இவர்கள்தான் இந்தியர்களென்று ஐரோப்பாவுக் கனுப்பிய பாதிரிமார்களைப் போன்றவரே இக்கண்மூடிகள்" என்றும், 176-ம் பக்கத்தில் "இது நம்மைத் தாழ்த்த வேண்டுமென்று நம்பகைவர் செய்த துன்மார்க்கக் காரியமே யல்லால் வேறல்ல" என்றும் கனம் நாடார் அவர்கள் பேசியதை நான்வாசித்த போது, லண்டனிலிருக்கும் சி. எம். எஸ். (ஆங்கிலேய) காரியதரிசிக்கு, நாளது ௵ ஜனவரி௴ 30௳ நான் எழுதியகடிதத்தின் மொழிப் பெயர்ப்பை தங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்வது நலமாயிருக்குமெனக் கருதுகிறேன். ஷை கடிதத்தின் மொழிப்பெயர்ப்பு இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

தங்களின் உண்மையுள்ள,

R. P. டேவிட் நாடார்.

## உதாசின நாமகரணம்.

1920-ம் வருஷத்திற்குரிய சர்ச்சுமிஷனெரி பாக்கட் புஸ்தகத்தில், மிஷனின் பல ஸ்தாபனங்களையும் அவைகளின் உற்பவத்தைப் பற்றியும் சுருக்கமாய்க் கொடுத்திருக்கும் குறிப்புகளில், 1820-ம் ௵த்தில் சுவிசேஷத்தை முதலாவதாக தென் இந்தியாவில் ஏற்றுக் கொண்ட ஜாதியாரைப்பற்றி ஆபாசமான வார்த்தைகளால் சுட்டிக் காட்டப்பட் டிருக்கிறது. அப்புத்தகத்தில் கண்டவாசகம் இதனடியில் வருமாறு, அதாவது:—"தமிழ் ஜனங்களுக்குள், விசேஷமாய் சாணார் அல்லது பனைமா விவசாயிகளுக்குள், சுவிசேஷம் பரவுவதில் ஓய்ந்து போகவில்லை" என்பதாம். இதன் சம்பந்தமாய் இதன்கீழ்க் கண்டவைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவது எனக்கு அத்தியாவசியமாய்க் காணப்படுகிறது.

(1) சொல்லப்பட்டிருக்கும் வகுப்பார் சாணார் அல்ல. ஆனல் அவர்கள் "சான்றோர்" சாணார் என்பது தமிழ்ப் பாஷையின் உச்சரிப்பில் உண்டான ஒருகவறு. பொருத்தமும், திருத்தமுமான

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

வார்த்தை "சான்றோர்" மேலும் இக்குலத்தார் பெருந்தன்மையு (பிரபுக்கள்), யுத்தப்பிரியரான ஜாதியார் என்றர்த்தம் கொள் "க்ஷத்திரிய சான்றோர்" என்று கிரமப்படி அழைக்கப்பட வேண்டு

(2) உலகத் தோற்றமுதல், உயர்பதவியில் தோன்றிய ம வைது, ஜாதியாவது, உலகத்தில் கிடையாது இதன் உண்மை வேதசரித்திர ஆதாரங்களைக் கொண்டு நிரூபிக்கக்கூடும். தற்காலத் நாகரீக மடைந்திருக்கிற எல்லா ஜாதிக்காரர்களும், ஒரு காலத் மிலேச்சரா யிருந்தவர்கள்.

(3) சி. எம். எஸ். பாக்கெட் புஸ்தகம் வெளியிட்டவர் சாணார் என்ற பதத்தோடு சேர்ந்த வார்த்தைகளுக்குப்பின் " நூற்றாண்டுகளுக்கு முன் தென்னிந்தியாவில் தங்களுக்குச் சொ மான ராஜாங்க முடைத்தா யிருந்தவர்களும் ஆளும் ஜாதியாரா யிருந்தார்கள்" என்னும் வாசகத்தைச் சேர்க்காமல், பாரபக்ஷமா செய்திருப்பது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

தென்னிந்தியாவிலுள்ள மிஷனெரிகள், தற்போது பாக்கெட் பு தகத்தில் சொல்லியுள்ள வார்த்தைகளை மாத்திரம் வெளியிட்டது "சான்றோர்" வாழ்வடைந்திருந்த காலத்தைத் தெரிவிக்காமல் ம த்து வைத்தது மானகாரியம், இக் குலத்தவரை வேண்டுமென் தாழ்த்த உத்தேசித்துச் செய்திருக்கிறார்கள் என்று நான் நிச்ச படுகிறேன்.

இவ்வித ஆபாசமான வசனிப்புகளை இனிமேல் பிரசுரிக் கூடாதென்று என்ஜன சமுகத்தாரின் சார்பாக நான் பலமாய் ஆ பனை செய்கிறேன்.

உமது உண்மையுள்ள,
(Signed) R. P. David.

---

## முக்கிய அறிவிப்பு.

நமது மித்திரன் இதுவரையுமுள்ள பத்திரிகைகள் கைவசமிரு தெல்லாம் செலவாய் விட்டன. புதிய சந்தாதார்களுக்கும் முந் சேர்ந்த சந்தாதார் சிலருக்கும் முந்திய பத்திரிகைகள் அச்சிட்டு சீ ரம் அனுப்பப்படும். நமது மித்திரனுக்கு சொந்தமாய் ஒரு அச்சாபீ ஏற்படுத்தும் வேலை நடந்து கொண்டிருப்பதால் கொஞ்சம் தாம படுகின்றன ஆகையால், சீக்கிரம் வேலை முடித்து 1, 2, பத்திரி களும் வருடமுடிவில் புத்தகரூபமாய் கட்டுவதற்குத் தோதாக அ பாதவர்களுக்குச் சரியாய் அனுப்புவிக்கப்படும் அதுபற்றி நேயர் அடிக்கடி கடிதம்விடா திருப்பாராக.

பத்திராதிபர்.



## மதுரைச் செய்தி.

ஓர் விசேஷம்:—"மதுரையில் பிரபல வர்த்தகரும் பிரசுதாரு மான ஸ்ரீமான் வி. பி. ரெத்தினசாமி நாடார் அவர்கள் மாக்ஷிமை தங் கிய கவர்ன்மெண்டாரவர்களால் மதுரைமுதலாவது கிளாஸ் ஸ்பெ ஷல் மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்."

குறிப்பு:—இவ் விசேஷத்தைக்கேட்ட நாடார்குல மனைத்தும் காருண்ய கவர்ன்மெண்டாருக்கு நன்றி செலுத்துவதுடன் நாமும் அன்புடன் வந்தனம் செலுத்துகின்றோம்.

பத்திராதிபர்.

தேகவியோகம்:—24உ (5—4—20) திங்கள் வாரம் கிருஷ்ண பக்ஷ துதியை சுவாதி நக்ஷத்திரமன்று பகல் மணி $2\frac{1}{4}$-க்கு கடகலக்கன முங் கூடிய புண்ணியகாலத்தில் மதுரை ம-ா-ா-ஸ்ரீ, A. P. பெருமாள் நாடாரவர்கள் 'சிவசாயுச்சிய பதவியடைந்தார்கள் என்பதைக் கேட்டு மிக்க விசனிக்கின்றோம்.

பத்திராதிபர்.

---


## விஜயவிகடன் புஸ்தக விளம்பரம்.

K. S. கதிர்வேல் நாடார் எழுதியது.

| | | | | |
|---|---|---|---|---|
| மைசூள்ளி முதல்பாகம் | ... | 0 | 10 | 0 |
| அங்கஜன் அருட்பா | ... | 0 | 1 | 0 |
| கேவலச்சிந்து | ... | 0 | 1 | 0 |
| கிழவன் கேஸ் அல்லது புஷ்பம் | ... | 0 | 5 | 0 |
| ராலீஸ் வீரன் சமர்த்து | ... | 0 | 1 | 0 |
| செங்கமலம் | ... | 0 | 2 | 0 |
| விகட ஞானக்கோர்பி | ... | 0 | 1 | 0 |
| கம்பம கருமஞ்செய்த தனவான்கேஸ் | ... | 0 | 4 | 0 |
| பெரியாயில் சின்னாயில் சண்டை | ... | 0 | 1 | 0 |

இப்புஸ்தகங்கள் படிக்கப் படிக்க விடாத நகப்பை விளைவித்து விவேகத்தைப் புகட்டும் வியப்பையுடையது. சொற்பகாபிகளே கைவ சமிருப்பதால் ஆர்டருக்கு முந்துக்கள்.

விலாசம்,
விஜயவிகடன் புஸ்தக சாலை
காளிபீடம்.
ராயபுரம் சென்னை.


Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## கோடைகாலத்திற்கு!!!

என்னதேவையோ அதை தேக்டிகொள்ள வேண்டு

# சர்வ தேள் விஷ சஞ்சீவி

ரிஜிஸ்டர்டு.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக்கைப்பற்றுங்கள் இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது ஏன் என்றால் ஓர் மனிதன் இரவில் 12 மணிக்கு நித்திரையில்

1920 வருஷத்திய கியாலண்டர் இனாம்.



ரூபாய் 100 இனாம்.

விஷந்திண்டி விட்டால் அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

விலை 1-பாக்கெட் அணு 0—8—0
விலை 12-பாக்கெட் ரூபா 5—0—0

**வி. எ. எஸ். பாணி,**

நெ. 3, இருளப்பன் தெருவு, மதராஸ்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection